திருவள்ளுவர் ஆண்டு 2035

# செந்தமிழ்

திங்கள் இதழ்

பகுதி : 2 தொகுதி : 98 பிப்ரவரி 2004

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| திரு. இரா. கண்ணன் | உறுப்பினர் |
| திரு. சோ. இராமகுரு | உறுப்பினர் |

## கல்லூரிக்குழு

| | |
|---|---|
| டாக்டர்.திரு.ந.சேதுராமன், M.S.,MCh.,(URO).,M.N.M.S.(URO).,FICS., | தலைவர் |
| திரு. மா.சங்கரபாண்டியன்,பி.ஏ., பி.எல் | செயலாளர் |
| திரு. இரா.அழகுமலை, எம்.ஏ.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| திருமதி. ராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி (எ) அசோக், பி.எல்., | உறுப்பினர் |
| திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ. | உறுப்பினர் |
| திரு. இரா.குருசாமி, பி.ஏ., | உறுப்பினர் |
| திரு. சோ.இராமகுரு | உறுப்பினர் |
| திரு. க. முத்தையா பசும்பொன் | உறுப்பினர் |
| டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பி.எச்டி., | உறுப்பினர் |
| திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி.,எம்.ஃபில்., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. செ.கந்தசாமி, எம்.ஏ.,பிஎச்.டி., | உறுப்பினர் |
| டாக்டர்.திரு. க.சின்னப்பா, எம்.ஏ.,பி.எச்.டி., பல்கலைக்கழக உறுப்பினர் | உறுப்பினர் |

# செந்தமிழ்


பகுதி : 2
தொகுதி : 98
*பிப்ரவரி* 2004

(தோற்றம் 1903) திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2035




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.1201911

மதுரைத் தமிழ்ச் சங்கம்
14-09-1901
THE MADURAI TAMIL SANGAM

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |


ஆசிரியர் **இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

பதிப்பாசிரியர் **இரா. சதாசிவம்** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை – 1.

# பொருளடக்கம்


இதழ்மணம் 39

திருக்குறள் வழிபாடு 40

திருக்குறளில் இயற்பியல் 41
*முனைவர் மெ.மெய்யப்பன்*

திருநாவுக்கரசர் ஒரு பார்வை 44
*இரா.சதாசிவம்*

பாரதி: ஒரு பல்கலைக்கழகம் 49
*க.கு.பன்னீர் செல்வம்*

நாமக்கல்லாருக்கு நன்றி சொல்வோம் 59
*புலவர் க.சண்முகம்*

தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா? 63

# இதழ்மணம்

செந்தமிழ் அன்பர்களே,

இந்த இதழில் பேராசிரியர் மெ.மெய்யப்பன் நீரின்றி அமையாது உலகு என்னும் கட்டுரையில் இயற்பியல் கூறுகளைச் சிந்திக்கவைத்துள்ளார்கள். நீருக்கும் உயிர்களின் பரிணாம வளர்ச்சிக்கும் உள்ள நெருக்கமான தொடர்பைத் தெளிவுபடுத்தி நீரின்றியமையாதது உடல் நலத்திற்கு என்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியிருப்பது உளம் கொள்ளத்தக்கது.

திருநாவுக்கரசர் தேவாரம் பன்முகம் கொண்ட மெய்ப்பொருள் நூல். அதன்கண் திருநாவுக்கரசரின் வாழ்வில் பழையாறையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்று திருநாவுக்கரசர் ஒருபார்வை என்னும் கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

புலவர் க.சண்முகம் அவர்கள், "மயில் முறைக்குலத்து உரிமை" குறித்துப் புலவர் பெருமக்களுடைய சிந்தனை வளத்தை 'நாமக்கல்லாருக்கு நன்றி சொல்வோம்' என்னும் கட்டுரையில் நயம்படி விளக்கியுள்ளார்கள்.

பேராசிரியர் க.கு.பன்னீர்செல்வம் பாரதி ஒரு பல்கலைக்கழகம் என்னும் தலைப்பில் பாரதியின் பன்முகப்பார்வையை ஆராய்ந்துள்ளார்கள்.

இற்றைக்கு எண்பது ஆண்டுகளுக்குமுன்பு ஈழ நாட்டு அறிஞர் சு.இராசையனார் செந்தமிழ் இதழில் எழுதிய கட்டுரை மறுபடியும் வெளிவருகிறது. தமிழ் உயர்தனிச் செம்மொழிஎன்பதையும் அதன் பழைமையும் தொன்மையும் என்றும் இளமை உடையதென்பதையும் வடமொழியோடு ஒப்பிட்டும் தமிழ் நலம்துய்க்கும் வண்ணம் படைத்துள்ளார்கள். இன்றைய தேவைகருதி மீண்டும் வெளியிடுகிறோம்.

தமிழறிஞர்கள் வாளாகிடக்காமல் "செந்தமிழ்" ஆக்கம் கருதி அதன் வளர்ச்சிக்கு ஒல்லும் வகை உதவ வேண்டுகிறேன்.

பதிப்பாசிரியர்

# திருக்குறள் வழிபாடு

*கடவுளே போற்றி*

*ஆதிபகவனே போற்றி*

*வாலறிவனே போற்றி*

*பற்றற்றானே போற்றி*

*இறைவா போற்றி*

*உலகியற்றியானே போற்றி*

*மலர்மிசை ஏகியோனே போற்றி*

*வானுறையும் தெய்வமே போற்றி*

*வேண்டுதல் வேண்டாமை இலானே போற்றி*

*பொறிவாயில் ஐந்தவித்தானே போற்றி*

*தனக்குவமை இல்லாதானே போற்றி*

*அறவாழி அந்தணனே போற்றி.*

*எண் குணத்தானே போற்றி*

*அருளே போற்றி*

*அறமே போற்றி*

*வானவனே போற்றி*

*செம்பொருளே போற்றி*

*மெய்ப்பொருளே போற்றி*

*ஊழ் வகுத்தானே போற்றி போற்றி*



தொகுத்தளித்தவர்
இராம.இராஜேந்திரன் பி.ஏ.,பி.எல்.,
வெண்ணாமலை, கரூர்-6.

# திருக்குறளில் இயற்பியல்

# 3.நீரின்றி அமையாது உலகு

*முனைவர் மெ.மெய்யப்பன்*

'வான் சிறப்பு' எனும் அதிகாரத்தில் வள்ளுவர் மழை பற்றியும், உலகில் வாழும் உயிரினங்களுக்கு அதன் தேவை பற்றியும் தெரிவித்துள்ளார். கடவுள் வாழ்த்தையடுத்து வான் சிறப்பைக் கூறுவதிலிருந்து மழையின் சிறப்பைக் குறிப்புணர்த்துவது விளங்குகின்றது.

நீரில்லையேல் இப்பூவுலகம் இல்லை என்று சொல்லுமளவிற்கு உலகிலுள்ள அனைத்துயிரினங்களும் உயிர் வாழ்வதற்கு நீர் இன்றியமையாததாகும். உடல் உறுப்புகளின் கட்டமைப்பிற்கும், வளர்ச்சிக்கும், வேலை செய்வதற்கும், உடல் வெப்பநிலையை ஒரே சீராக வைத்திருக்கவும், நீர் காரணமாக இருக்கின்றது. இதனால் நீரோடு தொடர்பற்ற உயிரினங்கள் யாதொன்றுமில்லை. சூரியக் குடும்பத்தில் எந்தக் கோள்களில் நீர் வளமிக்கதாய் இருக்கின்றதோ, அங்கு மட்டுமே உயிரினம் தோன்றி உயிர்வாழும் சூழ்நிலை மேம்பட்டுக் காணப்படுகின்றது என்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இது உயிரினங்களுக்கும் நீருக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை சுட்டிக் காட்டக்கூடியதாக இருக்கின்றது.

விலங்கினங்களை எடுத்துக் கொண்டால் அவற்றின் எடையில் ஏறக்குறைய எழுபது விழுக்காடு நீர் அடங்கியுள்ளது. குருதியில் தொன்னூறு விழுக்காடும், மூளை, சிறுநீரகம் மற்றும் தசை போன்றவற்றில் எண்பது விழுக்காடும், எலும்பில் இருபத்திரண்டு விழுக்காடும் நீர் உள்ளது. உயிரினங்களின் தோற்றம், வளர்ச்சி மற்றும் பரிணாமம் இவற்றில் நீர் ஒரு முக்கியமான மூலப்பொருளாக இருப்பதற்கு அதன் சிறப்புப் பண்புகளே காரணமாகும்.

நீரின் ஆவியாதல் வெப்பம் $2256 \times 10^3$ ஜீல்/கி.கிராம் ஆகும். இது மற்ற பொருள்களுக்கு இருப்பதைவிட மிக அதிகமானது.

இப்பண்பின் காரணமாகவே மனிதன் மற்றும் விலங்குகளின் உடம்பின் வெப்பநிலையைக் கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்தும் ஒரு நுட்பமான சாதனமாக நீர் விளங்குகின்றது. நீரின் சுயவெப்பம் 4186 ஜீல்/கி.கிராம்/கெல்வின் ஆகும். இதனால் நீரானது மிகக்குறைவான அணு மற்றும் மூலக்கூறு இயக்கங்களோடு அதிக வெப்பத்தை ஏற்றுக் கொள்கின்றது. வெப்பம் மிகுந்த கோடை காலங்களில், உடலின் வெப்பநிலை மாறாமல் சீராக இருப்பதற்கு இது பாதுகாப்பாய் இருக்கின்றது. நீரின் மின் கடத்தாப் பொருள் மாறிலி 80 ஆகும். இஃது இவ்வளவு அதிகமாக இருப்பதால் நீர் ஒரு பொதுக் கரைப்பானாக விளங்குகின்றது. இதனால், பல்வேறு பொருட்கள் கரைந்த இன்றியமையாத கரைசலுக்காக ஒவ்வொரு உயிரணுவும் நீரையே கரைப்பானாகக் கொண்டுள்ளது.

இதுபோன்ற நீரின் பல்வேறு சிறப்புப் பண்புகளுக்குக் காரணம் நீர் மூலக்கூறின் சிறப்பான கட்டமைப்பேயாகும். நீர் மூலக்கூறில் இரண்டு ஹைட்ரஜன் அணுக்களும் ஓர் ஆக்ஸிஜன் அணுவும் பிணைந்துள்ளன. இதனை $H_2O$ என்று வேதியியலார் குறிப்பர். ஹைட்ரஜன் இயற்கைத் தனிமங்களிலேயே மிகவும் எளிமையானது. ஹைட்ரஜன் அணுவில் நேர் மின்னூட்டம் கொண்ட ஒரு புரோட்டானும், அதைச் சுற்றி வலம் வரும் எதிர்மின்னூட்டம் கொண்ட ஓர் எலக்ட்ரானும் இருக்கும். இரு ஹைட்ரஜன் அணுவிலுள்ள எலக்ட்ரான்கள், ஆக்ஸிஜன் அணுவோடு பிணைப்பை ஏற்படுத்தும் பொழுது, அவற்றின் கருவிலுள்ள புரோட்டான்கள் நிர்வாணமாகின்றன. இதனால், அவை வேறொரு அணுவிலுள்ள எலக்ட்ரானோடு பிணைப்பை ஏற்படுத்த முயல்கின்றன. இதனையே ஹைட்ரஜன் பிணைப்பு (Hydrogenbond) என்பர். இதன் காரணமாக நீரின் மூலக்கூறுகள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு ஒரு நீண்ட தொடர் மூலக்கூறாகக் காணப்படுகின்றது. இந்த ஹைட்ரஜன் பிணைப்பே மரபியல் கூறுகளைத் தீர்மானிக்கும் நியூக்ளிக் அமிலம் போன்ற உயிரியல் மூலக்கூறுகளின் அமைப்பிற்கும் காரணமாக விளங்குகின்றது. மரபியலுக்கு அடிப்படையாக விளங்கும் இந்த பேரியல் மூலக்கூறுகள் அணு மற்றும் எளிய மூலக்கூறுகளின்

சேர்க்கையிலிருந்து உருவாவதற்கும், இரு கூறுகளாய்ப் பிளந்து பல்கிப் பெருகுவதற்கும் பிணைப்பாற்றலால் தாழ்ந்த ஹைட்ரஜன் பிணைப்பே துணை புரிகின்றது.

நீரின் இன்றியமையாமையை உணர்ந்திருந்த வள்ளுவர்,

"நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வான்இன்று அமையாது ஒழுக்கு" (குறள்:20)

என்று தம் குறளில் கூறியுள்ளார். இதன் மூலம் மேற்சொல்லப்பட்ட நீரின் சிறப்புகளை மறைமுகமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். எப்படிப்பட்டவர்க்கும் நீர் இல்லாமல் உலக வாழ்க்கை நடைபெறாது என்பதால், இதன் மூலம் நீருக்கும், உயிர்களின் பரிணாம வளர்ச்சிக்கும் உள்ள நெருக்கமான தொடர்பை வள்ளுவர் அறிந்திருக்க வேண்டும் என்றே தோன்றுகிறது. மழை இல்லையானால் ஒழுக்கம் நிலைபெறாது என்று அவர் அடுத்துக் கூறுவதால், இயற்கை ஒழுக்கம் வேறுபட்டு பரிணாம வளர்ச்சியில் முரண்பாடுகள் தோன்றலாம் என்றும் வள்ளுவர் குறிப்புணர்த்துகின்றார்.

-வளரும்

## புதிய வருகை

*குப்பைக் கவிஞர், முனைவர் வாசு. கணபதி அவர்கள், தாம் பயின்ற பழைய நூல்களை மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்கு வழங்கியுள்ளார்கள்.*

*நன்றி.*

# திருநாவுக்கரசர் ஒரு - ...

இரா. சதாசிவம்

திருநாவுக்கரசர் மக்களைச் சைவம் சார்ந்து நிற்பதற்குரிய நெறிமுறைகளை வகுத்துத் தொகுத்துத் தம் பாடல்களில் தெளிவுறுத்தினார். அவருடைய பாடல்கள் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் சைவர்கள் இல்லந்தோறும் வழிபடு தோத்திரப் பாடல்களாகப் பாடப்பட்டு வருகின்றன. திருநாவுக்கரசர் தமிழகத்தின் சிவத்தலங்கள் எங்கும் சென்று திருமுறையீடு செய்தார். அதனால் அவர் தம் பாக்கள் திருமுறை என்று போற்றப்படுகின்றன. அவருடைய தனித்தன்மையை அவர் பாடிய தாண்டகப் பாடல்கள் வழி தமிழ்கூறும் நல்லுலகம் நன்கறியும். திருநாவுக்கரசர் இப்பெற்றிமையால் தாண்டக வேந்தர் என்று போற்றப்படுகின்றார். இத்தேவாரப் பாக்களில் தற்சமயம் 125 திருக்கோயில்களில் பாடப்பட்டவையே கிடைக்கின்றன. பொதுப்பதிகங்களாகப் பாடப்பட்டவையும் சில உள்ளன. அவருடைய பாடல்கள் திருக்குறுந்தொகை, திருநேரிசை, திருவிருத்தம், திருத்தாண்டகம் என்னும் செய்யுள் யாப்பில் அமைந்துள்ளன. திருநாவுக்கரசர் பாடிய திருப்பதிகங்களில் தற்போது கிடைப்பவை 312 பதிகங்களே யாகும். அவற்றுள் அடங்கிய பாடல்கள் 3066 ஆகும்.

திருநாவுக்கரசர் சைவப்பணி தொடங்குவதற்கு முன்பு சமணர்கள் சைவர்களுடைய சைவத்திருக்கோயில்களைச் சமணப் பாழிகளாகவும் சமண்பள்ளிகளாகவும் மடங்களாகவும் மாற்றி வைத்திருந்தனர். இவ்வாறு செல்வாக்கு மிக்க சமயங்கள் தங்கள் காலத்தில் பிற சமயநிலையங்களை மாற்றித் தங்களுடைய சமய வழிபாட்டு மையங்களாக வைத்துக் கொள்வது பல காலங்களில் நிகழ்ந்துள்ளது வரலாற்று உண்மையாகும். சாக்கியர்கள் செல்வாக்கு மிக்கிருந்த நாட்களில் சமணர்களுடைய பாழிகளையும் பள்ளிகளையும் தங்களுடையவைகளாக மாற்றிக்கொண்டனர். சமணர்கள் செல்வாக்குப் பெருகிய காலங்களில் சாக்கியர்களுடைய பள்ளிகளோடு

சைவத்திருக்கோயில்களையும் சமண் பள்ளிகளாக மாற்றித்தங்கள் சமய மையங்களாக அமைத்து வாழ்ந்து வந்தனர்.

திருநாவுக்கரசர் தம் காலத்தில் சமணர்கள் கைப்பற்றி ஆட்சி செய்த சைவத் திருக்கோயிலைச் சமணர்களிடமிருந்து மீட்டி சைவர்கள் வழிபாடு செய்கின்ற கோயிலாக மாற்றித் தேவாரம் பாடியுள்ளார். அதற்குரிய குறிப்பு ஒன்று திருநாவுக்கரசர் பாடலில் கிடைக்கிறது.

சோழநாட்டில் திருப்பழையாறைச் சிவன் கோயிலைச் சமணர்கள் சமண்பள்ளியாக மாற்றி அங்கு வதிந்து வருவாராயினர். தொண்டை நாட்டில் பல்லவ மன்னனுடனும் சமணர்களுடனும் அருட்டிறம் காட்டி வெற்றி கொண்ட திருநாவுக்கரசர் சோழநாட்டில் புகழ்மிக்க பழையாறையை அடைந்தார். ஆண்டுச் சமணர்கள் சிவன் உறையும் திருக்கோயிலைத் தங்களிடமாக மாற்றியிருப்பதை அறிந்து திருநாவுக்கரசர் அறப்போர் தொடங்கினார். சமணர்களை அகற்றிச் சிவனை வழிபட்டன்றி அவ்விடம் நீங்குவதில்லை எனக் கூறித் திருநாவுக்கரசர் உண்ணா நோன்பு மேற்கொண்டார். இச்செய்தியை தெய்வச் சேக்கிழார் தம் திருத்தொண்டர் புராணத்தில் பின்வருமாறு பதிவு செய்கிறார்.

> வண்ணங் கண்டு நான் உம்மை வணங்கியன்றிப் போகேன் என்று
> எண்ணம் முடிக்கும் வாகீசர் இருந்தார் அமுது செய்யாதே:
> அண்ணலாரும் அது உணர்ந்தங்கு அரசு தம்மைப் பணிவதற்குத்
> திண்ணமாக மன்னனுக்குக் கனவில் அருளிச் செய்கின்றார்.

உண்ணா நோன்பு மேற்கொண்ட செய்தி சோழ நாட்டில் சைவ எழுச்சியைத் தோற்றுவித்திருக்க வேண்டும். அரசன் மக்களுடைய எழுச்சிக்கு அடிபணிந்து சமணர்கள் பற்றியிருந்த சைவக் கோயிலை மீண்டும் சைவர்கள் வழிபடுதலமாக மாற்றித் திருப்பணியும் செய்தான். திருநாவுக்கரசரும் சிவனை வழிபட்டுச் சமண வீழ்ச்சியைக் குறிப்பிட்டுப் பாடுகின்றார். சமணர்கள் இந்நிகழ்ச்சிக்குப் பின்பு தங்கள் தோல்வியைத் தாங்காது சமயக் கடமையாகவும் வீடுபேற்றுக்குரிய நெறியாகவும் உள்ள சல்லேகனை என்னும் நோன்பை மேற்கொண்டு தற்கொலை

செய்து கொண்டார்கள். தற்கொலை வீடுபேற்றுக்குரிய அரியநெறி என்பது சமண சமயக் கோட்பாடாகும். இச் செய்தியைக் கீழ்வரும் பாடலின்கண் திருநாவுக்கரசர் குறிப்பிடுகின்றார்.

வாயிருந் தமிழே படித்து ஆளுறா
ஆயிரம் சமணும் அழிவு ஆக்கினான்
பாயிரும் புனல் ஆறை வடதளி
மேயவன் என வல்வினை வீடுமே

(அப்பர் தேவாரம் பழையாறைத் திருப்பதிகம்)

திருநாவுக்கரசர் தமிழ் வழி நின்று தமிழர் போற்றி வழிபடும் செம்பொருளாகிய சிவத்தை உணராது மாறுபட்ட சமணர்கள் ஆயிரவரைச் சிவன் அழிவாக்கினான் என்று குறிப்பிடுவது சிந்தனைக்குரிய செய்தியாகும். சமணர் சிந்தையில் தற்கொலை எண்ணத்தை உண்டாக்கி அவர்கள் அழியும்படி செய்தவன் சிவனே என்னும் குறிப்பு எண்ணற்பாலதாகும். இவ்வாறு திருநாவுக்கரசர் தொண்டை நாட்டில் திருக்கெடிலப்புனல் போற்றிச் சைவம் செழிக்கச் செய்தது போலச் சோழநாட்டில் காவிரிப்புனல் போற்றிச் சைவம் பரவச் செய்தார். இந்நிகழ்ச்சி சோழநாட்டில் பெருஞ் சமய மாற்றத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். சமணம் வீழ்ந்து சைவம் பெருக வித்திட்டிருக்க வேண்டும். தொண்டை நாடு சோழநாடு ஆகிய தமிழகத்தின் பெரும்பகுதியில் நடையறாப் பெருந்துறவு பூண்டு வாக்கினாலும் உழவாரப் படையேந்தி உடலாலும் தொண்டு செய்து தமிழ்மக்கள் வாழ்வில் செம்பொருள் சிவநெறி அன்றாட வாழ்க்கையின் வாழ்வு நெறியாக மலரச் செய்தவர் திருநாவுக்கரசர். தமிழகத்தின் முதுபெரும் கிழவராக வாழ்ந்த திருநாவுக்கரசர் கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகரின் கல்வி வல்லார்களை எல்லாம் கண்டு கேட்டு இன்புற்றவர். அறிவார்ந்த மெய்ப்பொருள் நெறிகாட்டிய சான்றோர் உழவாரப்படையேந்தி உழைத்து உடலுழைப்பின் இன்றியமையாப் பெருமிதத்தை மக்களுக்குத் தம் செயலால் உணர்த்தினார். இதனால் நாட்டில் மக்களனைவரும் கோயில்பணியும் திரு நெறிய தமிழ்ப்பணியும் செய்ய முந்துவாராயினர். மக்கள் பக்தி சிரத்தையுடன் திருநெறி போற்றி

ஒழுகுவாராயினர். அதனாலன்றோ இன்றும் தமிழகத்தில் சிவனுக்கு வானளாவிய கோபுரங்களுடன் கூடிய கற்றளிகளைக் காணமுடிகிறது. தென்னகத்தின் தென்பகுதியாகிய பாண்டிய நாட்டிற்கும் திருநாவுக்கரசர் வந்து தமிழ்ப்பணியும் சைவப்பணியும் செழிக்கச் செய்தது அறிந்து இன்புறத்தக்கதாகும்.

நன்பாட்டுப் புல்வனாய்ச் சங்கம் ஏறிச் சிவபெருமான் தமிழ்வளர்த்த மதுரை என்றும் திருநாவுக்கரசர் நெஞ்சில் நின்றதாகும். பாண்டிய நாட்டுக்குள் நுழையும்போது அவர் திருப்புத்தூர் வழியாக நுழைந்தார். திருப்புத்தூர் இறைவனை வழிபடும்போது தமிழ்ச்சங்கம் நினைவுக்கு வந்தது. உடனே திருநாவுக்கரசர்

> நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
> நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண்
>
> ........................ ......................
>
> ...................... அவன் என் சிந்தையானே

(தேவாரம் திருப்புத்தூர் பதிகம்)

என்று போற்றுகின்றார். திருநாவுக்கரசர் சங்கம் வைத்து மொழி வளர்த்த பாண்டியர் நாடெங்கும் சென்று செந்தமிழால் இறைவனைப் போற்றித்துதித்தார். மதுரையும் மதுரையைச் சுற்றியுள்ள பகுதிகளும் தொடக்க காலத்திலிருந்தே சமணர் கோட்டையாக விளங்கியவையாகும். திருநாவுக்கரசருக்கு முன்பு திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டில் சமணர் எதிர்ப்புப் போர் நடத்தி வாகை சூடிய செய்தி தமிழிலக்கியத்தில் பரவலாகப் பேசப்படும் செய்தியாகும். திருநாவுக்கரசர் செந்தமிழ் சிவணிய ஆலவாய் அண்ணலை வழிபட எழுந்தருளிய ஞான்று பாண்டியநாடு சமணர் செல்வாக்கு மறைந்து எங்கும் சைவம் நடைமுறை வாழ்வாகச் செழித்திருந்த காலமாகும். திருநாவுக்கரசரும் பாண்டிய நாட்டில் சமணரைப் பற்றிய சிந்தனையின்றி அமைதியான சூழலில் சைவப்பணி செய்தார். பாண்டிய நாட்டுத் திருப்பதிகங்களில் யாண்டும் திருநாவுக்கரசர் சமணர்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்க உண்மையாகும். தேவை ஏற்பட்டபோது மட்டுமே திருநாவுக்கரசர் சமணர்களைப் பற்றிக் குறிப்பிட்டுக் குற்றம் கடிந்து சைவ

மேன்மை விளங்கப் போற்றித் திருப்பதிகம் பாடியிருக்கிறார் என்பது இதனால் தெளிவாகின்றது. திருஞானசம்பந்தர் ஒவ்வொரு திருப்பதிகத்திலும் தவறாது சமணர்களைக் குறிப்பிடுவது ஈண்டு ஒப்பு நோக்கத்தக்கதாகும்

திருநாவுக்கரசர் திருக்காளத்தி முதல தென் கோடியாகிய குமரி, திருராமேச்சுரம் வரைச் சென்று தமிழர் மண்ணில் தமிழும் சைவமும் செழிக்க வாயிருந்தமிழும் கையிலே உழவாரப் படையும் கொண்டு அருட்கொடை வழங்கி வாழ்ந்திருக்கிறார். அருள்நெறி அவர்காலம் தொடங்கி வாழையடி வாழையாகத் தமிழ் மண்ணில் செழித்து வளர்ந்திருக்கிறது. பிற சமயங்களின் செல்வாக்கு அவர் காலந்தொடங்கி அருகிக் குறைந்து நலிந்து மறைந்திருக்கிறது.

இத்தகைய அரும்பணி செய்த திருநாவுக்கரசர் திருவதிகை, திருப்பூந்துருத்தி, திருவீழிமிழலை திருப்புகலூர் போன்ற இடங்களில் திருமடங்களை அமைத்துத் தொண்டாற்றியுள்ளார். திருக்கெடிலப் புனலும் காவிரிப்புனலும் வையைப் புனலும், குளிர்தூங்கும் குற்றாலமும் அவர் நெஞ்சம் நிறைந்து இயற்கை வாழ்வு நடத்திய சான்றோர் திருநாவுக்கரசர். அவர்தம் தேவாரம் நாவும் மனமும் நிறைந்த இசைப்பாக்கள்.

# பாரதி: ஒரு பல்கலைக்கழகம்

*க.கு.பன்னீர் செல்வம்*

## முன்னுரை

நாளும் பண்டைய பெருமைகள் குலைந்து, பண்பாடு கருகி, மரபுகள் மாய்ந்தன. அந்த நேரத்தில் இந்தியத் தென்கோடியில் சுதந்திரப் பள்ளு ஒன்று ஓங்கி ஒலித்தது. தெள்ளு தமிழில் அள்ளக் குறையாத அமிழ்தமாய். அது பாரதியின் குரல் அச்சத்தை அகற்றுவதே பாரதியின் முதற் குறிக்கோளாயிருந்தது; அவரது படைப்புகளில் முதன்மைப் பொருளாய் முகிழ்ந்ததும் இதுவே! இளம் வயதில் மனதில் பதியும் சிந்தனைப் போக்கே பின்னாளில் வளர்ச்சி பெற்ற மனிதனை வழிநடத்தும் என்பதை அனுபவபூர்வமாக உணரவைத்தவர் பாரதி. மனித வளம் என்பது மனிதனின் உடல், மன, மூளையின் ஆற்றலை வளர்த்து, அதை மனித சமுதாயத்திற்கே பயன்தரும் வகையில் பயன்படுத்துவதேயாகும். இவரது கவிதை என்ற கைவாளின் முன்பு எப்பொருளும் எதிர்கொண்டதில்லை.

## சுதந்திரச் சிந்தனை

இந்தியத் துணைக் கண்டம் அடிமைப்பேரிருளில் ஆட்பட்டுக் கிடந்த நேரத்தில் விடுதலை முழக்கமிட்ட தேசியக்கவி பாரதி சுதந்திரப் போராட்டத்திற்குப் போர்ப்பரணிபாடி தமிழ் மக்களை விடுதலைப் போருக்கு ஆயத்தப்படுத்திய பாரதி என்ற புயற்காற்று வல்லாண்மை மிக்க வெள்ளையரின் ஆதிக்கத்தை வேரோடு சாய்க்கத் துடித்த சுதந்திர வீரர்களுக்குத் தாரக மந்திரம் ஓதிய வீரக்கவிஞர் பாரதி "பாரத தேசத்தை அன்னையாகவும் அருளளிக்கும் கடவுளாகவும் உருவகப்படுத்தி, அவ்வன்னையின் மக்களாகிய இந்திய மக்கள் அனைவரும் சாதி மத பேதமின்றி ஒருதாய் மக்கள் என்ற உணர்வோடு ஒன்றுபட வேண்டும் என்ற தேசிய ஒருமைப்பாட்டையும் ஊட்டியது 'பாரதியின் தமிழ்' இவ்வுணர்ச்சிக்கு வடிவமாக பாரதமாதாவை அவர், 'செப்புமொழிப் பதினெட்டுடையாள் எனில் சிந்தனை ஒன்றுடையாள்' என்று வர்ணிக்கிறார். இந்தியா,

இந்தியமக்கள் அனைவருக்கும் சொந்தமென்பதை இந்திய மக்கள் வெள்ளிப் பனிமலையில் உலாவி, மேலைக்கடல் முழுவதும் கப்பல்விட்டு, கங்கையையும், காவிரியையும் இணைத்து ஒரு நாட்டினர் என்ற உணர்ச்சியோடு வாழ வேண்டும்" என்று வகுத்துக்காட்டுகிறார்.

இத்தகைய பெருங்கவிஞர் ஒருவர் தமிழ் மண்ணில் தோன்றிது தமிழ் இனத்துக்குப் பெருமை; தமிழ் மரபுக்கு உரிமை மானுட வரலாற்றில் இருபதாம் நூற்றாண்டு பெருஞ்சிறப்பு வாய்ந்தது. உலகப் போர்கள் என்ற கரும் புள்ளிகளைத் தவிர கடந்த நூற்றாண்டில் உலகெங்கும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், வளர்ச்சிகள், மறுமலர்ச்சிகள், சீர்திருத்தங்கள் ஆகிய முன்னேற்றங்களுக்கு அளவே இல்லை. அரசியல், பொருளாதாரம், சமுதாயம், கலை, இலக்கியம், சமயம், அறிவியல் என்று அனைத்திலும் முன்னேற்றங்களை உலகளாவிய நிலையில் பரக்கக் காண்கிறோம். நம்மைப் பொருத்தவரையில், குடியரசானது கடந்த நூற்றாண்டின் பெருஞ்சாதனையாகும். அன்னியருக்கெதிராக தேசிய உணர்ச்சி துளிர்த்தெழுந்த போது தனது தேசிய கௌரவத்தை நிலை நாட்டிக்கொள்ள வேண்டிய அவசியம் பாரதிக்கு ஏற்பட்டது. தேசியத் தகுதியை அளிக்க மறுத்த ஆங்கிலேயருக்கு இந்த நாட்டின் பெருமை மிகுந்த பண்பாட்டை உணர்த்த வேண்டியதாயிற்று. இந்நாட்டு மக்களின் பண்பாட்டின் பெருமையை எடுத்துரைத்து அவர்களுக்குத் தன்னம்பிக்கையையும், சுயமரியாதையையும், போராட்ட உணர்வையும் தூண்ட பாரதியின் கவிதைகள் தேவையாயிற்று. ஒரு நாட்டின் அரசியல் சீர்திருத்தம் சமூகச் சீர்திருத்தத்துடன் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது என்றுணர்ந்த பாரதி, அச்சமுதாய சீர்திருத்தத்தைத் தனி மனிதனிடம் சில உயர்ந்த குணங்களை உருவாக்குவதன் மூலமாகவே அடைய முடியுமென்று உறுதியோடிருந்தார். இதற்கு அடிப்படையானது சுதந்திர உணர்வு. அச்சுதந்திர உணர்வை அடைய ஆதாரமானது மற்றவரது சுதந்திர உணர்வை மதிக்கும் சமத்துவப் பண்பு இச்சமத்துவ உணர்வு சாதி, மதம், பால் பாகுபாடின்றி வளர வேண்டுமென்று அவர் உறுதிகொண்டிருந்தார்.

“விடுதலை எதைப் பற்றியது ஆனாலும் - நாடு, மொழி, இனம், சமுதாயம், பொருளாதாரம் என்னும் இவற்றுள் எதைப்பற்றியது அனாலும் - அதன் பொருள் புறச்சக்திகளிலிருந்து - அழிவுச் சக்திகளிலிருந்து நாட்டை மீட்பது; முன்னோட்டத் திசையில் அதைத் திருப்புவது; மக்களை ஒற்றுமைப்படுத்துவது, ஆக்க வழியில் அவர்களைச் செயற்பட வைப்பது என்பதாகவே இருக்கவியலும்” என்பதற்கிணங்க பாரதியின் சிந்தனைகளும் அதனையொட்டிய படைப்புகளும் விளங்கின.

நாட்டின் விடுதலையே பாரதியின் பெருங்கனவு; உயிர்நோக்கம். அதனால் அவருடைய பாடல்களில் விடுதலை முழக்கம், சுதந்திரவேட்கை, தேசிய உணர்வு என்பவை நீரோட்டம் போல் எங்கும் பெருகி ஓடுவது உண்மையே.

**பாரதித் தமிழ்**

“தாய்மொழிப்பற்று என்பது அயல்மொழி வெறுப்பாக மாறக்கூடாது; தனித்தமிழியக்கம் என்பது பிறமொழி ஒழிப்பியக்கமாகவும் மாறக்கூடாது. அப்படி மாறிவிட்டால் அது மொழிப்பற்று அல்ல; மொழி வெறி. அது தனித்தமிழியக்கமல்ல; தனித்தமிழ் ஆதிக்கம் என்று பொருள்படும். இந்தப் போக்கை மாற்றவே நல்ல தமிழியக்கங்கள் வேண்டும். வாய்ப்பும் தேவையும் விருப்பமும் ஆற்றலும் உள்ளவர்கள் தமிழோடு பிற மொழியையும் கற்பது நல்லது; கற்கவும் வேண்டும். இதனால் தமிழ் தாழ்ந்து விடாது; மேம்படும். தமிழர்கள் மாறிவிட மாட்டார்கள்; பயனடைவர்” இக்கருத்துக்களைத்தான்.

> ‘சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
> செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்’
> என்றும்,
> ‘..................நன்மையும் அறிவும்
> எத்திசைத் தெனினும் யாவரே காட்டினும்,
> மற்றவை தழுவி வாழ்வீராயின்
> அச்சமொன்று இல்லை’

என்றும் பகர்கின்றார் பாரதி

புலவர் நாவில் புகலடைந்திருந்த தமிழைத் தம் எளிய நடையால் - இனிய ஓசையால் பொதுமக்கள் நாவில் பொலிவடையச் செய்தவர் பாரதி சுருங்கச் சொன்னால் கடந்த நூற்றாண்டின் கவிதைத் தமிழில், உரைநடைத் தமிழில், மேடைத் தமிழில் எல்லாம் 'பாரதித்தமிழே' இயங்கியது. இந்தத் தமிழியக்கத்துக்கு கடந்த நூற்றாண்டின் நாயகன் பாரதியே. "தொல்காப்பியம் ஒல்காப் புகழுடையது; சங்கப்பாடல்கள் கற்றறிந்தார் ஏத்துபவை; திருக்குறள் உலகப் பொதுமறை; சிலப்பதிகாரம் நெஞ்சை அள்ளுவது; தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி போன்ற பக்திப்பாடல்கள் ஊனையும் உயிரையும் உருக்குவன; புராணங்களும் இதிகாசங்களும் தெய்வமணம் கமழ்பவை; சித்தர் பாடல்கள் தத்துவம் உள்ளவை" என்றெல்லாம் நமக்கு நாமே சொல்லிக் கொண்டால் போதுமா? இவற்றின் மாண்புகளையும் தனிச்சிறப்புகளையும் அயலார் அறிய வேண்டாமா? தமிழின் இலக்கிய இலக்கணப் பெருமைகளை அவர்களது மொழியிலேயே எடுத்துக்கூறி வெளிப்படுத்த வேண்டுமல்லவா? இப்பணியைத் தமிழியலில் ஈடுபட்டுள்ளோர் மேற்கொண்டாக வேண்டுமே என்றெல்லாம் சிந்தித்த பாரதி,

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை;
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதைவணக்கஞ் செய்தல் வேண்டும்'

என்ற சுயவிமர்சன நோக்கோடு பாடிய பாரதி, 'தேமதுரத் தமிழோசை உலகெலாம்' பரவவேண்டும் என்பதை வேறு யாரால் சிந்திக்க முடிந்தது? சொல்ல முடிந்தது? பாரதி தீட்சண்யம் மிக்கவர்; தீர்க்கமாகச் சிந்திக்க வல்லவர்; தெளிவாக உணரக்கூடியவர்; எளிதாகச் சொல்லத் தெரிந்தவர். எனவே அவரால் மட்டும் அதுவும் அப்போதே சொல்லமுடிந்தது.

'தமிழால் பாரதி தகுதி பெற்றதும்
தமிழ் பாரதியால் தகுதி பெற்றதும்' உணர்வது எளிது;
உரைப்பது அரிது.

பாரதியின் வரலாறு தமிழ் இலக்கியத்தின் வரலாறாயிற்று; தேசியப் போராட்டத்தின் வரலாறாயிற்று; சீர்திருத்தச் சிந்தனைகளின் வரலாறாகத் தோற்றம் கொண்டது. பொருள் வளமில்லாது வாழ்க்கையோடு போராடியவர் பாரதி; ஆனால் தமிழ் மொழிக்கோ அளவற்ற வளங்களைச் சேர்த்தவர். உரிய நேரத்தில் - உரிய முறையில் தமிழகம் மகாகவி பாரதியாரைப் பயன்படுத்தியிருந்தால் தமிழகமும், தாய்மொழியும் இன்னும் பெரும்பயன் பெற்றிருக்கக்கூடும். "நாற்பதாண்டு காலம் கூட முழுமையாக வாழாமல் நம்மை விட்டுப் பிரிந்து சென்றவர் பாரதி. இந்தக் குறைவான ஆயுட்காலத்தில், அவர் தேசியக் கவியாகப் பரிணமித்து, மகாகவியாக மலர்ந்து மணம் பரப்பிய இலக்கிய வாழ்க்கைக் காலம் பதினாறே ஆண்டுகள்தான். இந்த பதினாறு ஆண்டுகாலத்தில் அவர் படைத்தளித்த கவிதைகள்தான் அற்பாயுளில் உயிர்நீத்த பாரதியை அழியாப் புகழ் படைத்த அமர கவிஞனாக்கியுள்ளன." அச்சத்தைக் கைவிட்டால் சுதந்திர உணர்வு ஒவ்வொருவரின் உள்ளத்திலும் உயிர்த்தெழும் என்பதை,

"அஞ்சி அஞ்சி சாவார் – இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே"

என்று மக்களது அச்ச உணர்வை எள்ளி நகையாடுகிறார்.

### அறிவியல் சிந்தனை

சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் கலையும் அறிவியலும் மின்னல் வேகத்தில் மேலை நாடுகளில் வளரத் தொடங்கின. அந்த வேகத்திற்கு ஏற்ப மேலைநாட்டு மொழிகளும் வளரலாயின. இந்த இருவகை வளர்ச்சியும் தமிழ் மண்ணில் தொடங்கவில்லை. மேலைநாட்டில் மலரும் புதிய கண்டுபிடிப்புகள், அறிவியற்கலைகள், தொழிற்புரட்சிகள் எல்லாம் தமிழ் மண்ணில் தோன்றி வளரவில்லையே என்று பாரதி கலங்கியிருக்கிறார். அடிமை நாட்டில் புதிய கலைகள் வளராதது பெருங்குறை இல்லை, புதுமையுமில்லை. ஆனால் அந்தப் புத்தம் புதுக் கலைகளை - அறிவியல் கருத்துகளை - தமிழ் மக்களுக்குத் தாய்மொழியில் எடுத்துச் சொல்லி விளங்க

வைக்கும் ஆற்றலாவது தமிழுக்கு இருக்க வேண்டும். அந்த ஆற்றலும் தமிழுக்கு இல்லாதிருப்பதே பாரதிக்குப் பெரும் குறையாகத் தோன்றியிருக்கிறது. இதனை,

'புத்தம் புதிய கலைகள் – பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்;
மெத்த வளருது மேற்கே – அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

சொல்லவும் கூடுவதில்லை – அவை
சொல்லுந் திறமை தமிழ்மொழிக் கில்லை;
மெல்லத் தமிழினிச் சாகும் – அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும்'

என்று எடுத்துக்கூறி தமிழ்மக்களையும் தமிழ் அறிஞர் பெருமக்களையும் பாரதி எச்சரித்துள்ளார். அதற்கு

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்க்க வேண்டும்;
இறவாத புகழுடைய புது நூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்'

என்று தமிழியலாளர்களை வேண்டிக் கொள்கிறார்.

தமிழினம் போர்க்குணம் கொண்ட இனமாக எழுச்சி பெற வேண்டுமென்றால் மக்களிடமுள்ள அஞ்சும் இயல்பைப் போக்க வேண்டும் அச்சத்தை அகற்ற வேண்டும் என்பதற்கு,

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை
இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை
உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமில்லை.'

என்று பாடினார். இதன் மூலம் வீரத்தையும் போர்க்குணத்தையும் தமிழினத்திற்கு ஊட்ட பாரதி முயற்சித்தார். எந்த இனத்தை அச்சமும் பயமும் பிடித்திருக்கிறதோ அந்த இனம் வீழ்ச்சியடைந்து மண்ணோடு மண்ணாகிப் போய்விடுவதை வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. இந்திய இனங்களிடையே தமிழினந்தான் மிகுதியும் அச்சத்தால் பிடிக்கப்பட்டு அவதியுறும்

ஓர் இனமாக உள்ளது. பாரதி தமிழர்களிடம் காணப்படும் அச்சத்தை வெறுத்தார். அதனால்தான் தனது புதிய ஆத்திசூடியில் 'அச்சம் தவிர்' என்ற முழக்கத்தை முதலாவதாக எழுப்பினார். மற்றவர்களெல்லாம் 'அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்' என்று வளைந்து கொடுத்தபோது பாரதி அஞ்சாமல் நிமிர்ந்து நின்றார்.

## சமத்துவக்கோட்பாடு

பாரதி என்ற பெயரைக் கேட்ட உடனேயே நமது நினைவுக்கு நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூகசீர்திருத்தம், பெண்விடுதலை, சமூக நலஈடுபாடு, ஆன்மீகம், வேதாந்தம், உயிர்நேயம், உலகளாவியபார்வை, இலக்கியத்தில் புதுமை எனப் பலப்பல. 22 வயது இளைஞன் முதலில் அறிமுகமாவது ஒரு சமூக சீர்திருத்த வாதியாகத்தான். 1904 டிசம்பர் மாதம் சர்.வி.சங்கரன்நாயர் தமது ஒரு உரையில், "நாட்டிலிருக்கின்ற சாதிமுறை, சமத்துவத்திற்கும், சகோதரத்துவத்திற்கும் எதிராக உள்ளது" என்று கூறினார். அதை எதிர்த்து ஒரு வாசகர் இந்து பத்திரிக்கையில் (The Hindu) எழுதினார். சங்கரன் நாயருக்கு ஆதரவாக இளைஞன் பாரதி, இந்து பத்திரிக்கையில் ஒரு கடிதம் எழுதினான். அதில் பெரும் கொடையாளியான பறையன் ஒருவனை, பிராமணத் தரகனை விடத் தாழ்ந்தவன் என்று கருதும் விந்தையான முறை இது (The wonderful system which makes a pariah philanthropist inferior to a Bharamin go-between) என்று சாதியமுறையை எள்ளி நகையாடுகிறார். ஏறத்தாழ நூறு ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு கூற எவ்வளவு துணிச்சல் வேண்டும்! இந்தத் துணிவும் சாதிக்கொடுமை எதிர்ப்பும் பாரதிக்கு வாழ்நாள் முழுவதும் இருந்தது.

"பாரதியின் பாட்டையும் சிதம்பரனாரின் பேச்சையும் கேட்டால் செத்த பிணம் உயிர்த்தெழும்; அடிமைப்பட்ட தேசம் ஐந்தே நிமிடங்களில் விடுதலை பெறும்" என்று நீதிபதி பின்ஹேயின் கூற்றிலிருந்து பாரதியின் வீரப்பாடல்களுக்கு ஆங்கில ஆதிக்கம் எவ்வாறு நடுக்கம் கண்டது என்பதை உணரமுடியும். அந்த காலங்களில் அதாவது "தேசம் அடிமைத் தளைகளின்

உறுத்துதலை உணர்ந்து ஓலமிட்டபோது தேசிய உணர்ச்சியைப் பாட்டில் அமைத்தது பாரதிதான்."

சமூக சீர்திருத்தம், அரசியல் சுதந்திரம் இவற்றில் எது முதலில் என்பது பற்றி அப்பொழுது நாட்டில் இருவேறு கருத்துக்கள் இருந்தன. சமூக சீர்திருத்தத்திற்குப் பிறகுதான் அரசியல் சுதந்திரம் கோரவேண்டும் என்ற கருத்தை இளைஞன் பாரதி எதிர்க்கிறார். இதை, "ஆசாரத் திருத்தங்கள் நிறைவேறும் வரை ராஜாங்கத் தந்திரங்களுக்கு இத் தேசத்தார் தகுதியுடையவர் களில்லை என்று சொல்வோர் அயோக்கியர்களாகவேனும் அல்லது மூடர்களாகவேனும் இருக்க வேண்டும் என்பதில் ஆட்சேபமே கிடையாது" என்பதிலிருந்து இவ்வுண்மை விளங்கும்.

### தேசியப் பார்வை

"தேசிய உயர்வு இன்றி அரசியல் விடுதலை இல்லை. சாதி உயர்வு இருக்குமிடத்தில் தேசிய உயர்வு இல்லை என்று குறிப்பிடுகிறார். உலகின் செல்வங்கள் அனைத்தைக் காட்டிலும் மக்களே மிகவும் மதிப்பு மிக்கவர்கள். இந்தியாவின் குரல்வளையை நெறித்துக் கொண்டிருக்கும் கையைக் கொண்ட வேறொருவன் இடும் ஆணையினால் ஏற்படும் முன்னேற்றம் எல்லாம் மதிப்பற்றவை. அதனால் தன்மானமுள்ள, தன்னம்பிக்கையுள்ள, விடுதலை வேட்கையுள்ள, மனிதத் தன்மையுள்ள, சுதந்திர மனிதர்களை உருவாக்குவது அரசியல் சீர்திருத்தத்திற்கு அடிப்படை மாற்றாக அமைய வேண்டும்" என்கிறார் ஷெல்லி. இதனடிப்படையில் "அரசியல் கோட்பாடுகளை மக்களிடம் பரப்ப பாரதி மேற்கொண்ட உத்திகள் பல. தற்கால இழிநிலையை இகழ்ந்துரைத்தல், ஒளிமயமான எதிர்காலத்தை மனக்கண் முன்காட்டல், பாரததேசத்தின் பழம் பெருமைகளை எடுத்துரைத்தல், பாரதமாதாவை அன்னையாகவும், கடவுளாகவும் உருவகித்தல், போர்ச் சிந்தனைகளையும் வீர உணர்ச்சிகளையும் தேர்ந்த மனஇயல் நிபுணனைப் போன்று கவிதைகளின் மூலமும், கட்டுரைகளின் மூலமும் பிரயோகிக்கிறார்".

பாரதியின் படைப்புலகின் பரப்பும், வீச்சும், அழகும், ஆழமும் பிரமிப்பூட்டுபவை. புத்துலக விழிப்புக்குப் பள்ளியெழுச்சிப் பண் பாடிய பாரதியின் படைப்பு மாட்சி, கருத்துப் பொருண்மை, உணர்ச்சி வீரியம் பற்றிய அறிமுகமும், அறிதலும், புரிதலும், உள்வாங்குதலும் இளைஞர் சமுதாயத்துக்குப் பெரும்பயன் அளிக்கும். அவரது ஆளுமை பன்முகப்பட்டது. இன்று தன்னலம், குறுகிய குழுநலம், சாதிச்சார்பு, சமயவெறி, உக்கிரமான நுகர்வியல் தாக்கம்-இவையே நமதுசமூகக் களனை ஆக்கிரமிக்கும் எதிர்மறைப்பண்புகள். இவை பாரதியிடம் அறவேயில்லை.

பாரதியின் வாழ்வும் அவரது படைப்பு ஆளுமையும் ஒன்றுடன் ஒன்று பிசிறில்லாமல் ஒன்றிணைந்தவை. இன்றைய படைப்பாளர்களிடம் நாம் எதிர்கொள்ளும் பிளவுபட்ட ஆளுமையை (Schizophrenia) பாரதியிடம் காணமுடியாது. பாரதியின் மனித நேயம் அறிவு, உணர்வு, பரிவு சார்ந்தது மட்டுமல்ல; அவரது மனிதநேயத்தின் ஆணிவேர் அவரது அர்த்தமுள்ள, ஆழமான ஆன்மிக அடித்தளம், வேரும், மண்ணும் காற்றும், விண்ணும் புணர்ந்து ஈன்றெடுத்த உயிர்த்துடிப்புள்ள மகவு. அழிந்துவிடும் உடலையும், அதனில் உள்ள மனதையும், மூளைத்திறனையும் பாரதி மேம்போக்காகக் கூறிவிடவில்லை. இவ்வையகம் பயனுறும்படி தற்சோதனை கொள்ள வேண்டும் என்கிறார்.

மனிதநேயத்தின் ஒரு முக்கியமான கூறு பால் - சார்ந்த நீதி (gender justice). இந்தியப் பெண்ணுலகத்தின் அவலம் பாரதியின் இதயத்தை, உணர்வை, ஆழமாகத் தீண்டியது. பெண்ணுரிமை குறித்த பிரச்சினைகளை ஒரு தாயின் பரிவுடனும், ஒரு தந்தையின் பொறுப்புணர்வுடனும், தன் தங்கைக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு வெகுண்டெழும் ஓர் அண்ணனின் அறச்சினத்துடனும் பாரதி அணுகுகிறான். பெண்ணின் அங்கங்களையே பார்த்துக் கொண்டிருந்த புலவர்களுக்கிடையே பெண்ணின் ஆன்மாவைத் தரிசித்தவன் பாரதி.

முடிவுரை

'இலக்கியம் ஒரு காலக்கண்ணாடி' என்பதற்கேற்ப பாரதியாரின் கவிதைகள் அவர் வாழ்ந்த காலச்சூழலைத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. தனி மனிதனைப் புகழ்ந்து பாடுகின்ற புகழ்ச்சிப் பாமாலைகள் புற்றீசல்கள் போலப் பெருகிக் குவிந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் பாரதியார். எனினும் அக்கால நடைமுறை மரபுகளை உடைத்தெரிந்து புதிய உலகை தன் கவிதையால் கண்டார். "கவிதை எல்லாப் பொருள்களையும் விழையத்தக்கனவாக மாற்றியமைக்கும்; அது உலகத்தின் பொதுத்தொடர்பை விலக்கி அப்பொருளில் மறைந்து கிடக்கும் அழகைப் புலப்படுத்திச் சிறப்பாக்கும்" என்பதை நிருவியவர் மகாகவி பன்முகங் கொண்ட பாரதியை எம்முகங்கொண்டு நோக்கினும் புதுமை, தீர்க்கமான துணிவு, தெளிந்த மாறுபட்ட சிந்தனைகள் இவற்றின் ஒருங்கிணைந்த ஒரு முகமாக பல்கலைகளைக் கொண்ட ஒரு பல்கலைக்கழகமாகத் திகழ்கிறார்.

மேற்கோள்கள்


1. தாமோதரன் அ.தமிழியில்-22 உ.த.ஆ.நி. சென்னை - 113, 1982, ப.82
2. மேற்படி ப.84
3. ரகுநாதன், பாரதி: சிலபார்வைகள், முன்னுரை, ப.3
4. வேங்கடசுப்பிரமணியம் ஆ.கி, தினமணி 11.09.2002
5. மகாலிங்கம் கா.பாரதி மகிழ்பரப்பும் ம.பொ.சி. முன்னுரை ப.V
6. சுந்தரராஜன் பெ.கோ, கண்ணன் என் கவி, ப.156
7. வேங்கடசுப்பிரமணியன் அ.கி.தினமணி 11.09.2000
8. Shelly, A Defense of Poetry, P.52
9. முத்துச் சிதம்பரம் ச.தமிழியல் -36, உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 113. டிசம்பர் 1989 ப.84
10. Shelly, A Defense of Poetry, P.32

# நாமக்கல்லாருக்கு நன்றி சொல்வோம்

புலவர் க.சண்முகம், கழுகுமலை.

ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு முன் 'கலைமகள் கதம்பம்' என்னும் பழைய இலக்கிய மலரைப் படித்தேன். 1949 அக்டோபர்த் திங்களில் வெளியான 'கலைமகள்' மாத இதழில் வந்துள்ள 'கற்றது கைம்மண்ணளவு' என்ற கட்டுரை இருந்தது. நாமக்கல் திரு வெ.இராமலிங்கம் பிள்ளை அக்கட்டுரையை எழுதியிருந்தார். கம்ப இராமாயணம் பற்றிய ஆய்வுக் கட்டுரையாக இருந்தபடியால் கட்டுரைச் செய்திகளைக் குறிப்பெடுத்து வைத்தேன்.

கட்டுரையாசிரியர் நாமக்கல்லார் கூறியவாறே செய்தியைக் காண்போம்.

பரதன் நாடாளவும் இராமன் காடேகவும் சூழ்ச்சியுரைத்த கூனியை மறுத்துக் கைகேயி கூறிய பதிலுரை,

*"வெயின்முறைக் குலக் கதிரவன் முதலிய மேலோர்*
*உயிர்முதற் பொருள் திறம்பினும் உரை திறம்பாதார்*
*மயின்முறைக் குலத்துரிமையை மனுமுதல் மரபை*
*செயிருறப் புலைச் சிந்தையால் என்சொனாய் தீயோய் "*

(அயோத் - 165)

என்ற பாடலுக்கு ஒரு புத்தகத்தில் மயின்முறைக் குலத்துரிமை என்ற தொடர்க்கு மயில் முதலில் பொரித்த குஞ்சுக்குச் சிறகு முளைப்பது போல் இராமனுக்குப் பட்டம் கட்டியபின் பரதனுக்குப் பட்டம் கட்டுவது முறைமை எனக் குறிக்கப்பட்டிருந்தது. இது மயிலுக்கு மட்டும் சொன்னதில் சிறப்பில்லை. எல்லாப் பறவைக்கும் பொருந்தும். ஆகவே, இக்கருத்தை விட்டுவிட்டேன்.

1915இல் வெளியான 'அறிவியல் அமெரிக்கன்' (Sceintific American) என்ற ஆங்கில இதழைப் பார்த்தேன் (நாமக்கல்லார்) அதில் வந்த கட்டுரை ஒன்றின் தலைப்பில் மயில் தோகை விரித்தாடும் வண்ணப்படமும் அதனருகில் சிறு மயில்கள் நிற்கும் காட்சியும் இருந்தன. அப்படத்தின் கீழ் விளக்கம் இருந்தது.

ஒரு அமெரிக்கப் பிரபு ஏராளச் செலவில் பறவை ஆய்வு செய்துள்ளார். மயில் பற்றியும் விரிவாக ஆய்வு செய்துள்ளார். அதில் தாயொடு குஞ்சுகள் சேர்ந்திருக்கும் பொழுது, முதல் குஞ்சு கலாபம் விரித்தபின் ஏனைய கலாபம் விரிக்கும் என ஆய்ந்துள்ளார். பட்சி சாஸ்திரம் என்றும் குறிக்கப்பட்டிருந்தது.

இவ்விதழைக் கண்ட நாமக்கல்லார் அவர்கள் தம் சொற்பொழிவில் தாம் கண்ட கருத்தாகப் பல இடங்களில் கூறிப் பெருமைப்பட்டதாக எழுதியுள்ளார்.

ஒரு சமயம் நாமக்கல்லார் இல்லத்திற்கு நெல்லைத் தமிழறிஞர் வெள்ளேகால் திரு.ப.சுப்பிரமணிய முதலியார் சென்றிருந்த பொழுது, அவர்களிடம் 'மயில்முறைக் குலத்துரிமை' பற்றி விளக்கம் கேட்டுள்ளார். திரு.வெ.ப.சு அவர்கள், தணிகைப் புராண அடிகள் இரண்டினைக் கூறி தம் கம்பராமாயண ஆய்வில் இதுபற்றி எழுதியுள்ளதாகவும் சொல்லி 'இக்காலத்துப் புராணப் பயிற்சி குறைவதால் இத்தகைய இடர்ப்பாடுகள் ஏற்படுகின்றன' என்றுரைத்துச் சென்றுள்ளார்.

இதைக் கேட்ட நாமக்கல்லார் வியந்து, கற்றது கைம்மண்ணளவு என்று கட்டுரையை முடித்துள்ளார்.

மேற்கண்ட செய்யுளின் கருத்தை முதலில் காண்போம். வெயில் கொண்ட சூரியனை முதலாகக் கொண்ட மேலோர்கள் (சூரிய குலத்தவர்) உயிர் முதலான சிறந்த பொருள் இழப்பினும் முறைமையின் சொல் தவறாதவர்கள். மயிற்குல முறையை, மனு முதல் மரபை, குற்றம் வருமாறு உன் குறைப் புத்தியால் என் சொனாய்? என்று கைகேயி கூனியைக் கோபித்துக் கூறினாள்.

இச்செய்யுளில் 'மயின்முறைக் குலத்துரிமை' என்ற தொடர்தான் பலரையும் ஆழமாகச் சிந்திக்க வைக்கிறது. இத்தொடருக்கு உரையாசிரியர்கள் சிறுசிறு வேறுபாடுகளுடன் உரை வகுத்துள்ளனர்.

கம்ப இராமாயணம் முழுமைக்கும் பேருரை கண்ட வைணவப் பேரறிஞர் திரு வை.மு.கோபாலகிருட்டிணமாச்சாரியர் அவர்கள் தம் விளக்கவுரையில் 'மயின்முறைக் குலத்துரிமை' என்பதற்கு,

மயில் முட்டையிட்டுப் பொரிக்கும்பொழுது முதற்பார்ப்பின் கலாபத்துப் பீலி பொன்னிறமடைய மற்றைய பார்ப்புகளின் கலாபங்களின் பீலிகள் பொன்னிறமடையாதவாறு போல முதற்குமரனே மணிமுடி புனைய மற்றையோர் முடி புனையாமையை உடையது மனுகுலமெனக் கருத்து விரிப்பர். இதற்கு,

*'பலாவம் பொழிலின் ஒருதாய் உயிர்த்த பலமயிற்கும்,*
*கலாவம் புனைந்த களிமயில் மூத்தது எனக்கருத'*
(தணிகைப் புராணம் - களவுப்படலம் 244)

என்ற தணிகைப் புராணம் மேற்கோளென்ப. இனி இத்தொடர்க்கு வேறு வகையாகவும் உரைப்பர். என விளக்கம் செய்துள்ளார்.

'கம்பராமாயண சாரம்' தொகுத்தளித்த பேரறிஞர் திரு.வெ.ப.சு. *அவர்கள் கம்ப இராமாயண சார உரையில்,*

மூத்த ஆண் மயிற்குஞ்சுக்கே கலாபம் முளைக்கும் என்பது ஐதிகம். ஒரு மயிலுக்குப் பல குஞ்சுகளிருந்தாலும் மூத்ததற்கே உச்சிக் கொண்டை முளைக்கும். அது மரித்த பின்னரே அடுத்ததற்கு முளைத்து வரிசையாய் வரல்போல் மூத்த மயிற்குஞ்சுக்கே கலாபம் முளைக்கு மென்பதற்குத் தணிகைப் புராணம் களவுப் படலம் 244ம் பாட்டு ஆதாரம்.

*'பலாவம் பொழிலின் ஒருதாய் உயிர்த்த பல மயிற்கும்*
*கலாவம் புனைந்த களிமயில் மூத்தது எனக் கருத'*
*(மந்தரை சூழ்ச்சிப்படலம் - 17)*

என்று பொருள் கூறியுள்ளார்.

அண்மையில் (1994) கோவை, 'கம்பன் அறநிலை' அமைப்பு மூலமாக, அறிஞர். திரு.அ.ச.ஞானசம்பந்தன் அவர்களை முதன்மைப் பதிப்பாளராகக் கொண்டு வெளிவந்துள்ள கம்ப ராமாயண உரையில் இச்செய்யுளுக்கு திரு.வை.மு.கோ. அவர்கள் உரையே வழிமொழியப் பட்டுள்ளது. மேற்சொன்ன தணிகைப் புராண அடிகளும் காட்டப்பட்டுள்ளன.

மேற்குறித்த உரையாசிரியர்கள் தலைமேற்கொண்டு போற்றத்தக்க பேரறிஞர்கள். கச்சியப்ப முனிவர் இயற்றிய

தணிகைப் புராணத்தையே மேற்கோள் காட்டுகின்றனர். தணிகைப் புராண அடிகளுக்குக் கொண்டுள்ள பொருளில் தான் வேறுபாடு உள்ளது. கலாபங்களின் பீலியில் பொன்னிறம் காணப்படும் என்றபொருள் தணிகைப் புராண அடிகளில் இல்லை.

'கலாபம்' என்பது தோகையைக் குறிக்கும். உச்சிக்கொண்டை என்ற பொருள் கொள்வதில் சிறப்பில்லை. அகரமுதலியிலும் அப்பொருள் இல்லை.

'கலாம் புனைந்த களிமயில்' என்ற தணிகைப் புராண அடிக்கு, 'தோகை விரித்து ஆடும் மயில்' என்று பொருள் கொள்ளுதல் பொருந்தும். களிப்பால் உண்டாதலே ஆடுந்தொழில்.

அமெரிக்கப் பிரபுவின் ஆய்வில் கண்ட முடிவும், தணிகைப் புராண அடிகளின் பொருளும் ஒன்று பட்டுள்ளது.

ஆகவே, ஒரு தாய் உயிர்த்த பல மயில்களுள்ளும் மூத்ததுகலாபம் விரித்தாடிய பின்பே ஏனைய கலாபம் விரித்தாடும். அதுபோன்று மூத்த மகனுக்கே முடியுரிமை முதன்மையுடையது. 'மயின் முறைக் குலத்துரிமை' என்ற தொடர் இப்பொருளை விளக்கம் செய்கிறது.

கலாவம் புனைந்த களிமயில் மூத்தது என்ற தொடர்க்குப் பொருள் காண நினைந்த உரையாசிரியர்கள் மூத்தது என்ற சொல் தவிர ஏனையன மயிலுக்கு இயல்பான அடைசொற்கள் என்று நினைந்திருக்கலாம். ஆகவே, கலாவம் - பொன்னிறமுடையது, உச்சிக் கொண்டையுடையது எனச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கலாம். இவ்விரண்டும் தொடர்புடையனவாக இருத்தலான் இப்பொருளைப் பலரும் ஏற்றியிருக்கலாம்.

அமெரிக்கப் பிரபுவின் நேரடி ஆய்வு உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. அந்த ஆய்வும், தணிகைப் புராண ஆசிரியரின் நுட்பமும், அதைக் கையாண்ட கம்பன் திறமும் நம்மை வியப்பின் உச்சிக்குக் கொண்டு செல்கின்றன. நாமக்கல்லார்க்கு நன்றி சொல்வோம்.

# தமிழ்மொழிக்கு வடமொழி செவிலித்தாயாகுமா?

கடந்த செந்தமிழ் 8ஆம் பகுதியிற் பாணினீயலகுதீபிகை யென்னும் பொருள் பற்றித் திருவநந்தபுரத்துத் திருவாளர் வையாபுரிப் பிள்ளை பி.ஏ., பி.எல்., அவர்கள் ஒரு கட்டுரை எழுதியிருந்தார்கள். அதன்கண், ஆரியமென்னும் வடமொழியே தமிழ்க்குத் தாய்மொழியாகி, அற்றை நாண் முதலாக வின்றுகாறும் வளர்த்து வருகின்றதென்பது அவர்களுக்கு உடம்பாடாகிறது. அதனை வலியுறுத்த அவர்கள் எடுத்துக்காட்டு மேதுக்கள் பின்வருவன:-

க. உலகியல் வழக்காணும் புலநெறிவழக்காணும் தமிழ்மொழியின்கண் திகழ்கின்ற மொழிகளுட் பெரும்பான்மையவெல்லாம் வடமொழிச் சொற்களாதல்.

உ. இலக்கணக்கொத்து நூலார் அன்றியுந் தமிழ்நூற் களவிலையவற்றுளொன்றே யாயினுந் தனித்தமிழுண்டோ வென வினாயது.

ங. தமிழ் நல்லிசைப்புலவர் நூற்குரிய பொருள்களென வெடுத்துக்கொண்டுரைத்தவெலாம் வடமொழி நூற்பொருள்களாதல்.

ச. அகத்தியந் தொல்காப்பிய முதலிய தமிழிலக்கணங்கட்குப் பாணினீயமும் ஐந்திரமும் முதனூலென்னும் பிரயோகவிவேகநூலார் கூற்று.

ரு. மாதவச்சிவஞானயோகிகள் வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காதெனக் கிளக்கும் தொல்காப்பிய முதற்சூத்திர விருத்திக் குறிப்பு.

இவையன்றிப் பிறவுமுளவேனும் விரிவுக்கஞ்சி விடுகின்றோம்.

அந்நூலின். தெய்வச் செந்தமிழ்மொழிக்குச் செவிலித்தாயென

வடமொழியைக் கூறுதலே பொருந்துவதாகுமெனப் பிள்ளையவர்கள் கூறினுமவர்கள் நுணுக்கவுரையின்கட் கருத்தொருப்படுகின்றிலேமாதலான், அஃது எம்மனோராற் றழுவப்படுவதன்றென நிறுத்தியதனை நிரலேயாராய்ந்து பரிகரித்து எமது உண்மைக்கருத்து நிலையிடுவாம்.

முதற்கண், பாடல்சான்ற புலவராற்று வழக்கினும் உலகவழக்கினுமாகத் தமிழிலுள்ள சொற்களில் ஒரு பெரும்பகுதி வடமொழிப்பதங்களாம். இது, வடமொழியைச் செவிலித்தாயெனற்குப் பொருந்துவதாமென ஊகிக்கின்றார்கள்; பிள்ளையவர்கள். தமிழ் மக்கள் வழங்கிய தமிழ்மொழி மிகப் பழையதாதலும், அஃதொரு தனித்த முழுமுதற்சொல்லாதலுங் கருதாதபிள்ளைவர்கள் பிற்றைஞான்று தோன்றிய சிலதமிழ் நூல்களில் வடசொற்கள் சில வழங்குதல் பற்றித் தமிழுக்குச் செவிலித்தாயென வடமொழியைக் கூற முன்வந்தார்கள். அங்ஙன மதுகொண்டு உரைத்தார், தமிழின்கணுள்ள வரியபெரிய நூல்களெல்லாம் கி.பி.பதினோறாவது அல்லது பன்னிரண்டாவது நூற்றாண்டிலோ மியற்றப்பட்டனவென் றுரையாத தென்னைக்கொல்! இவ்வாறெழுந்த கூற்றுக்களெல்லாம் தருக்க நூன் முறைபிறழ்ந்து கூறப்பட்டனவாகவின் அவற்றின் ஒல்லாமை யீண்டறிதல்வேண்டுவதொன்றாம். ஒருமொழி பிறிதொருமொழியோடு இனமுடைத்தோ வன்றோவென வறிதல், அம்மொழிகள் முன்முதற் றோன்றுங்காற் பிறந்த சொற்களை வைத்து ஒத்து நோக்குமுறையான் மாத்திரம் பெறப்படுவதாம். மக்கள் தங்கருத்தைப் பிறர்க்குப் புலப்படுத்தல்வேண்டி இட்ட வொலிக்குறிகளே சொற்களென்று கொள்ளப்படும். ஒருவர் மற்றொருவரிடத்துப் பழகப் புகுந்தவிடத்துப் பேசுகின்ற தம்மையும், முன்னின்று கேட்போரையும், பேசப்படுகின்ற பிறரையுஞ் சுட்டுதற்குச் சொற்கள் வேண்டுவர்; அச்சொற்கள் நான், நாம்; நீ, நீர், அவள், அவர்; அது, அவை என்பனவாம். இவை யொவ்வொரு மொழியினும் முற்பிறந்தனவாமாகலின் அவற்றை ஒத்து நோக்குதலான் மொழி ஒற்றுமை நன்கு தெளியப்படும். வடமொழியில் அகம், லயம் என்பன முறையே தன்மையொருமைப்பன்மையாகும்; த்வம், யூயம் என்பன

முன்னிலையொருமைப் பன்மையாகும்; அஸௌ, அமூ:, அத:, அமுகி என்பன படர்க்கை உயர்திணை யஃறிணையொருமைப்பன்மையாம். தமிழினும் வடமொழியினுமுள்ள இவ்விடப்பெயர்கள் தம்முட் பெரிதும் பொருந்துமாறு இன்மையால் அவை வேறு வேறாதல் துணியப்படும். இனி மக்கள் தம்மொடு இனவுரிமையுடையோரை குறிக்குஞ் சொற்களும் அவ்வாறே முற்பிறந்தனவாம். தமிழ் நன்மக்கள் தமக்கு உறவினராவாரை அம்மை, அப்பன், பிள்ளை, கணவன், மனைவி, அண்ணன், தம்பி, அக்கை, தங்கையென வழங்குவர். ஆரியரவரையெல்லாம் முறையே *மாதா, பிதா, சுத* அல்லது *பால, பதி, பார்யா, அக்ரஜா, ப்ராதா, ஸ்வஸா* எனப் பெயரிட்டு வழங்குவர். அம்முறைப்பெயர்களுந் தம்மோடு இனப்படுதலின்மையால் இவையும் வேறுவேறென்பது துணிக. இன்னு மிவ்வாறே உணவுப்பெயர், எண்ணுப்பெயர், காலப்பெயர், இடப்பெயர், பூதப்பெயர், விலங்கின் பெயர், உறுப்புப்பெயர், வினைப்பெயர் முதலியனவும் இவ்விருமொழிகளினும் வேறுபடுதல் காண்க. அவையெல்லா மீண்டு விரிப்பிற் பெருகும்; வந்துழிக் காண்க. இவற்றானும் பிறவாற்றானும் இவ்விருமொழியுந் தம்முளொன்றோடொன் றியையபில்லாத் தனித்தனிமொழிகாளதல் நன்கு பெறப்படும். இனித் தண்டமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளுவு, குறும்ப, இருள, எர்க்கலா, ஏனாதி முதலான மொழிகட்கெல்லா மிப்பத்து வகைச் சொற்களும் பொதுப்பட நிற்றல் யாண்டுங் கண்கூடாயறியக் கிடத்தலின் இவ்வொன்பது மொழிகளும் ஒன்றோடொன் றினப்பட்ட ஒரு தொகுதியாமென்க. இனி வடமொழியை வழங்கு மாரியரும், தமிழ் மக்களும் பிற்றைஞான்று மிக நெருங்கி மருவி வாழ்ந்தனரென்பது காணப்படுதலின் வடமொழிக்குரிய சொற்கள் தீந்தமிழினும் நறுந்தமிழிலுள்ள சொற்கள் ஆரியத்தினுஞ் சென்று கலப்புற்றன. அவர் அங்ஙனம் நெருங்கிவாழாது வேறாயிருந்த காலத்தே யெழுதப்பட்ட நூல்களில் விரவிய சொல்வழக்குக் காணப்படுதல் சிறிதும் இல்லையென்க. சங்கச் செந்தமிழ் நூற்களில் ஒரோவோராரியச்சொற்கள் காணப்படுதலென்னை யெனின்:- ஆரியர் தமிழ்மக்களோடு அக்காலத்துத்தான் விரவுதற்குப்

புகுந்தனராகலின் அச்சொற்கள் ஓரோவொன்று சுத்தச் செந்தமிழ் நூல்களினுங் காணப்படுவனவாயின. காணப்படினும் நூற்றுக்கு ஒன்றல்லது இரண்டு விழுக்காடு மிக வருகி வந்ததேயன்றிப் பிற்றைஞான்றை நூல்களிற்போலப் பெருகியவரவினவாய் அவை வந்ததில்லையென்க.

இனி அள், கள், கல், கு, சா, பண், பக், மின், வள், நல், மு முதலான சுத்தத்தனிச்செந்தமிழ்ப்பகுதிகளிற்பிறந்த ஆணி, அடவி, கடு, கலா, குடி, குண்டம், கூனி, குளம், கோட்டை, சவம், சாயா, பட்டினம், பாக்கம், மீனம், வளையம், நாரங்கம், முகம் முதலான தனித்தமிழ்மொழிகள், வடநூல்களிலும் ஆரியரது உலக வழக்கின் கண்ணும் வழங்குதல் பற்றிப் பிள்ளையவர்கள் யாது கூறுவார்களோ? மாண்டமிழே வடமொழிக்கு நற்றாய் என்பார்கள் போலும்! ஒருமொழியின் கண்ணுள்ள சொற்கள் பிறிதொரு மொழியகத்து விரவிப்புகுதல், அம்மொழியினைப் பயின்ற மக்களின் கூட்டுறவை விளக்குவதன்றி ஒன்றற்கு மற்றொன்று செவிலித்தாயெனவும், கோடாய் எனவும், தோழியெனவும் படுதல் நியாய நூற்கு ஒல்லாமையின் அது சாலாதென்க. என்னை? இற்றைஞான்று ஐரோப்பிய மொழிகளே செவிலித்தாய்களெனல் வேண்டுமென்பார்க்கு இறுக்கலாம் வழியின்மையின், பிள்ளையவர்கள் பொருத்துமாறு யாங்ஙனமென்றொழிக.

இனிச் சொல் வழக்கானேயன்றிச் சொல்லுச்சாரணமுறையானுந் தமிழ் மிகப்பழையதொன்றாதல் காட்டப்படும். தமிழில் வழங்கும் எல்லாச் சொற்களின் முதலினும் ட், ண், ர், ல், ழ், ள், ற், ன் என்னும் எட்டெழுத்துக்களும் நில்லாவென இலக்கண நூலில் ஒருவிதி காணப்படுதல் யாருமறிவர். டமருகம், ரகு, ராமன், லம்பகம் முதலியனவாக ஆரியமொழிச்சொற்கள் அவ்வெழுத்துக்களை முதலிற்கொண்டு வருமாகவும், முதுதமிழ்மட்டு மங்ஙனம் அவற்றை முதற்கண் நிறுத்துக்கொள்ளாமையும், அப் பிறமொழிச் சொற்களைத் தானெடுத்து வழங்கும்போதும் இடமருகம், இரகு, இராமன், இலம்பகம் என உயிர்முதனிறுத்து வழங்குதலும் என்னையென்றராய்கின்றுழி அதனியல்பு நன்குணரக்கிடக்கும்.

படைப்புக்காலத்தொடக்கத்திலே தோன்றிய மக்களியல்பும் நம்மனுபவத்திற்காணுஞ் சிறுமகாரியல்புந் தம்முட் பெரும்பான்மையுஞ் சமமுடையனவாம். இஃதெல்லார்க்கு மொத்ததாம். பிள்ளைப் பருவத்திலே சொல் உச்சரித்தற்கு இன்றியமையாக்கருவிகளான இதழ், நா, பல், அண்ணங்கள் வேண்டியவாறியங்காமையின் அப்பருவத்தே யம் மகார் வழங்குஞ்சொற்கள் மிகவுஞ் சிதைவுபடும். சிறார்ராமா என்பதனை ஆமா வென்றழைப்பர்; இவ்வுண்மை நாடோறும் நம்மனுபவத்திலிருக்கினறது. முன்னே மொழிக்கு முதலாகாவெனப்பட்ட எட்டுமெய்யெழுத்துக்களும் நா மேலண்ணத்தைச் சென்றுதொடும் முயற்சியாற் பிறப்பனவாம். நாவை மேலே சேர்த்தியுச்சரிக்கு மம்முயற்சி பிள்ளைப் பருவத்தேதொன்றாமையின், அப்பருவத்தே பிறக்குஞ்சொற் களெல்லாம் அவ்வெழுத்துக்களையுடையனவாகா. படைப்பாரம் பத்திற்றோன்றிய மக்களதியல்பும் பிள்ளைப் பருவத்தோடியைந்த தாகலின் அஞ்ஞான்று அவர் பிறப்பித்த சொற்களிலே அவ்வெழுத்துக்கள் காணப்படாவாயின. இதனால், தனித்தமிழ்ச்சொற்கள் மக்களுடைய முற்பருவத்திலே தோன்றி நிலவுதலுற்றனவென்பது எளிதிற் பெறப்பட்டது. வடமொழி முதலான மற்றை மொழிச் சொற்கண்முதலிலெல்லாம் அந் நாவெழுத்துக்கள் நிற்றலறியப்படுதலினவை மக்களுடைய பிற்பருவத்திலே தோன்றியவாமென்பது துணிபொருளாம். இனி இப்போது நூல் வழக்காயுள்ள வடமொழி யெஞ்ஞான்றும் பேசப்பட்டதில்லையென்றும், இதற்குத் தாய்மொழியான ஆரியமே யங்ஙனம் பேசப்பட்டதொன்றாமென்றும் அம்மொழி வல்ல பண்டிதர்கள் உரைக்கின்றார்கள். இவ்வாற்றால் மக்களது முற்பருவத்திலே பிறந்த நந்தமிழ்மொழி அவரது பிற்பருவத்திலே தோன்றிய சமஸ்கிருத மொழிக்கு மிகவும் முற்பட்டதாதல் முடிந்த உண்மையாமென்க.

இனியடுத்ததாக, எக்காலத்து முதன்முதற் றமிழ் நூல்கள் இயங்கத்தொடங்கினவோ அக்காலத்துத்தானே வடசொற்களுந் தமிழிற் பயின்று வந்திருக்கின்றன. இதுபற்றியே, இலக்கணக்கொத்து நூலாரும் அன்றியுந் தமிழ் நூற்

களவிலையவற்று - ளொன்றே யாயினுந் தனித்தமிழுண்டோ வெனக் கூறினார் என்கின்றார்கள் பிள்ளையவர்கள். இவ்விரண்டாமேதுவுக்கியைந்தன சிலபெற்றிகள் முன்னரே துவிற்புகன்றுள்ளோம். அதனையும் நோக்குக.

மற்று, ஒருமொழியின்கண் பிறமொழிகள் பயின்றுவரல் அம்மொழியின் வளனையும், நாகரிகமுதிர்வையுங் காட்டுவதன்றி யம்மொழிக்குச் சிறுமையைப் பயத்தல் யாண்டுங் கண்டிலேம்.

இந்நிலவுலகிற் பழமைக்காலந்தொட்டு இன்றுகாறும் வழங்கிவரும் மொழி தமிழ் ஒன்றேயாமென்பது சான்றே ரெரெவர்க்கும் இசைந்ததொன்றாம். மற்றை மொழிகளிற்சில பன்னூற்றாண்டுகட்கு முன்னே யிறந்து போயின; பல சின்னூற்றாண்டுகளாகவே தோன்றி நடக்கின்றன. சில பழமையாகி யிறந்தன. சில புதுமையுற்றுப் பிறந்தன. பழமையும் புதுமையுமொருங்குடைய ஒரு மொழியை யவற்றினிடத் தேகாணல் இயலாது. மற்றுத் தமிழ்மொழியேயோ பழமைக்குப் பழமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய்த் தன்னியல்பு பிறழாது, ஏறக்குறைய முந்நூறு நுராயிரம் மக்களினிடையே உலாவிவருகின்றது. இங்ஙன மிது பண்டுதொட்டே உயிரோடு விளங்கி வருதலின் முற்காலத்து வழங்கிய மொழிச்சொற்கள் சிலவும் பிற்காலத்து நடைபெறும் மொழிச்சொற்கள் சிலவும் இதன்கண்ணே கலந்து காணப்படுதல் இயற்கையாம் என்க. யாங்ஙனமெனின், நீண்டகால முயிரோடிருக்குமொருவன் பலநாடுகளினுஞ் சென்று முயலுந் தொழின் முயற்சியும் மிகுந்த சுருசுருப்புமுடையவனாயிருந்தால், அவன் றனதிளமைக் காலத்திற் றன்னோடிருந் திறந்துபோனவர் வைத்த பொருள்களிற்சிலவற்றையும், தனது பிற்காலத்தில் றன்னோடிருப்பவர் வழங்கும் பண்டங்களிற் சிலவற்றையும் கையாளநேர்வதே போல உயிரோடு சுருசுருப்பாய் உலாவிவருந் தமிழ்மொழியுந் தான் வழங்கிய பண்டைநாளில் வழங்கியிறந்த ஆரியம், இலத்தீன் முதலான மொழிச்சொற்கள் சிலவற்றையும், இஞ்ஞான்று தன்னோடுசேர்ந்துலாவும் ஆங்கிலம், துலுக்கு முதலாம் மொழிச்சொற்கள் சிலவற்றையுந் தான் எடுத்துப்

பயன்படுத்திவருகின்றது. பின்னுமிதனை விளக்கிக்காட்ட வேண்டின், உயர்ந்த மலைமுகட்டில் என்றும் நீரூறும் ஒருசுனையிலிருந்து இடையறாது ஓடிவரும் ஓரருவிநீருக்குத் தமிழை ஒப்பிடலாம். இவ்வருவிநீர் ஓடிவரும் வழியினிடையிடையே சுரப்பின்றுச் சேறும் நீருமாய் நிற்கும் குளங்குட்டைகட்கு வழக்கிலில்லாத வடமொழி, இலத்தீன் முதலாய மொழிகளையும், இன்னு மவ்வழியின் கீழே யிருபாலும் ஆங்காங்குப் புதிதுதோன்றித் தனித்தனியேயோடும் யாறுகளுக்கு ஆங்கிலம், துலுக்கு முதலாம் மொழிகளையும், இவ்யாறுகளிலிருந்து பிரிந்து வந்து அவ்வருவியோடு கலக்குஞ் சிலசொற்களையு மொப்பாகச் சொல்லலாம். பன்னெடுங்காலமாக வறளாது ஓடிவருந் தமிழருவியானது தான் வரும் வழியிலுள்ள ஆரியம் முதலான பழைய குளங் கூவல்களிற்சென்று அவற்றின் சொற்களாகிய நீரையுந் தன்னோடு கலப்பித்துப் புதியவாக்கிப் பின்னும் இடையிடையே தன் கண்வந்து கலக்கும் பிற்றைக்காலத்துச் சொற்களாகிய சிறுகால்களின் நீரையுந் தன்னுருவாக்கித் தன்னை வழங்கும் நன்மக்கட்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றது. இனியொரு மொழிச்சொற்கள் மற்றொரு மொழியில் வந்து கலக்க வேண்டுவதுதான் என்னையென்று வினாவுமிடத்து, ஒரு மொழியினைப் பேசும் மக்கள் தம் நாட்டையுந் தம்மினத்தாரையும் விட்டு நீங்காமலிக்கும்வரையில் அவர் தாமிருக்கும் நாட்டின்கண்ணே பிறமொழிபயிலும் பிறநாட்டார் வந்து சேராதிருக்கும்வரையில் அவர் பேசும் மொழியில் அயன்மொழிச்சொற்கள் வந்து விரவுதற்கி டமேயில்லை. அங்ஙனமின்றி, அவர் பலநாடுகளையும், அந்நாடுகளிலுள்ள பலதிறப்பட்டமக்களையும் போய்க் கண்டும், அவர் நாட்டுப் பண்டங்களைத் தாம் விலைக்குக்கொண்டும், தம்நாட்டுப் பண்டங்களையவர்க்கு விற்றும், அவர் தம் வழக்க ஒழுக்கங்கள் சிலவற்றைத் தாம் பற்றியும், தமக்குரிய சிலவற்றை யவர் கைப்பற்றுமாறுதந்தும் ஒருவரது நாகரிகத்தை யொருவர்பின்பற்றியும் ஒழுகும் உயர்ந்த அறிவும் விழுமியநடையும் வாய்ந்தவர்களாயிருந்தால் அவர்பேசும் மொழியில் மற்ற மொழிச்சொற்கள் புகுந்து கலவாமலிரா.

ஆகவே யிம்முறை கொண்டுநோக்கின், பல்லாற்றானும் உயர்ந்த நாகரிக வாழ்க்கையினையுடையராயிருந்த தமிழ்முதுமக்கள் வழங்கிவந்த தமிழிற் பிறமொழிச் சொற்கள் சில வந்து கலத்தல் இயல்பேயாமென்பது உணரப்படும். அங்ஙனமாயின், பழையகாலத்துத் தமிழ்மக்கள் அயனாட்டவரோடுசென்று அளவளாவும் நாகரிகமுதிர்ச்சியுடையரா யிருந்தா ரென்பதற்குச் சான்று என்னையென்புழி, இற்றைக்கு ஐயாயிரவாண்டுகட்கு முன்னரே எழுதப்பட்ட தொல்காப்பியமென்னும் நூல் ஒன்றுமேயொரு பெருஞ்சான்றாமென்க. அருமைபெருமையிற் சிறந்த விவ்வொரு நூலை ஒரு சிறிதுற்றுநோக்குவார்க்கும், இந்நூல் எத்துணைப்பழமையு டைத்தென்பதும், மிகப்பழைய நாளிலே யிவ்வுயர்ந்த நூலையெழுதிய ஆசிரியரோ டொருங்கிருந்த தமிழ்முதுமக்கள் எத்துணைச் சிறந்த அறிவும், நாகரிகமும் வாய்ந்து இருந்தனரென்பதும் பிறவு மவருள்ளத்திற் பதியாமற்போகா. இந்நூலின்கண்ணுள்ள வகத்திணையியலில் வரும் முந்நீர்வழக்கம் மகடுஉவோடில்லை என்னுஞ் சூத்திரத்தாற் பழந்தமிழ்மக்கள் பொருளீட்டும் பொருட்டுத் தம் மனைவி மக்களையும் நாட்டையும் விட்டுக் கடல்வழியே மரக்கலங்களிலேறித் தொலைவான நாடுநகரங்களிற் சென்று சேர்வரென்பது புலனாகின்றது. தமிழர்கள் கடல்தாண்டிச் சென்று வேற்றுநாடுகளிற் பொருள் முயற்சி செய்ததுபோலவே வேற்று நாட்டவருந் தமிழ்நாட்டிற்போந்து பலமுயற்சிகளை நடத்தினாரென்பது ஈபுரு மொழியிலெழுதப்பட்ட பழைய விவிலிய நூலினால் விளங்குகின்றதல்லவோ? அந்நூலில் தமிழ்நாட்டுக்கடற்றுறைப்பட்டினமான உவரியென்பது ஒபிர் எனவும், அவர் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றிச்சென்ற பொருள்களான மயில், சந்தனம், அரிசி யென்பவற்றின் பெயர்கள் தோகை, அனுகம், அரிசியெனவும் அவ்விவிலிய நூலில் எழுதப்பட்டிருக்கின்றன. சாலமன் என்னும் வேந்தன் இற்றைக்கு மூவாயிரவருடங்களின் முன்னே செங்கோலோச்சினானென்பது சரித்திர நூல்வல்லாரெல்லார்க்கு மொப்பமுடிந்தமையின் அவன் நாட்டார் தமிழ்நாடுபோந்து வாணிகம் நடாத்தினரென்பதும், இற்றைக்கு மூவாயிரவாண்டுக்கு நிகழ்ந்த முன்னரேயும்

மொழிக்கலப்பு ஆரியமல்லா வேனையமொழிகளோடும் நிகழ்ந்ததென்பதும் பிறவும் வெள்ளிடைவிலங்கல்போன்று தெள்ளிதிற்கிடக்கின்றது.

பின்னும், காவிரிப்பூம்பட்டினத்திற் கரிகாற்சோழனென்னும் வேந்தர்பெருமான் அரசியற்றினபோது பலவேறு மொழிகளை வழங்கிய பலவேறுதேயத்தாரும் அந்நகரத்தினிடத்தே போந்து கலந்திருந்து பலதொழின் முயற்சி நடத்தினமையும், கடலுக்கு அப்பாலுள்ள நாடுகளிலிருந்து குதிரைகள் வந்தமையும், இமயம் மேரு முதலிய மலைகளிலிருந்து பொன்னும், மணியும் மேற்குக்கணவாய் மலைகளிலிருந்து சந்தனக்கட்டை, அகிற்கட்டைகளும், தென்கடலிலிருந்து முத்துக்களும், கீழ் கடலிலிருந்து பவளங்களும், கங்கையாற்றின் பொருள்களும், இலங்கை பர்மாவென்னும் நாடுகளின் விளைபொருள்களும் அந்நகரத்தில் வந்து விலையானமையும் இற்றைக்குச் சிறிதேறக்குறைய இரண்டாயிர மாண்டுகளுக்கு முன்னியற்றப்பட்ட பட்டினப்பாலையிலும் அதற்குச் சிறிது பிற்பட்ட சிலப்பதிகாரத்திலும் விளக்கமாகச் சொல்லப்பட்டி ருக்கின்றனவல்லவோ? கிரேக்க நாட்டிலுள்ள யவனர்கள் தமிழ்நாட்டிற்போந்து தமிழரசரின் கீழ்ப்பல அலுவல்கள் பார்த்தமை பெருங்கதை, முல்லைப்பாட்டு முதலான பழந்தமிழ்ப்பாட்டுக்களில் நன்கு குறிக்கப்பட்டிருக்கின்றது. இன்னும், பண்டைநாளிலே தமிழ்நாட்டார் அயல்நாடுகளிலு மயல்நாட்டார் தமிழ்நாடுகளிலும் போந்து ஒருவரோடொருவர் அளவளாவியிருந்தமை யினிது புலப்படுதலின் வேற்று நாட்டவர் மொழிச்சொற்கள் சில தொன்றுதொட்டே தமிழிற்புகுந்து வழங்குவவாயின வென்றுணர்தல்வேண்டும். இவ்வாறுபட்ட கலப்பின்றிறனை யினிதாராய்ந்துணர்வார்க்குத் தமிழர் மிகவும் பழையதான காலத்திலேயே நாகரிகத்திற் சிறந்து முதன்மை பெற்று விளங்கினாரென்பது விளங்கும். அது சாலுமென்பீராயின், வேற்றுநாட்டுச்சொற்கள் தமிழிற்கலந்ததுபோலவே தமிழ்ச்சொற்களும் மற்றைத்தேயமொழிகளிற் கலந்து காணப்படுதல் வேண்டுமே! அங்ஙனங்கண்டிலேமெனின், அற்றன்று; தமிழ்ச்சொற்கள் பல பழையமொழிகளிலும் புதிய

மொழிகளிலும் கலந்து வழங்கவேபடுகின்றனவென்பது கடைப்பிடிக்க. இவை சில முன்னும் காட்டினாம். பின்னும் ஆணி, மீனம், நீர், தாமரை, கலை, குடம் முதலான பலதமிழ்ச்சொற்கள் ஆரியமொழியினும்; அசை, அருவி, இரும்பு, ஈன், எல்லாம், மென்மை, முகில் முதலான பலதமிழ்ச்சொற்கள் ஆங்கிலம், இலத்தீன், கிரேக்கு முதலான ஐரோப்பியர் மொழிகளிலும்; அவா, இரு, ஊர், எருமை, சினம், செவ்வை முதலான பல சொற்கள் சாலடியமெனப்படும் கலிலேயம், ஈபுரு முதலிய மிகப்பழைய மொழிகளிலும்; இன்னும் பல மற்றும் பலதேயமொழிகளிலும் ஒருங்கு கலந்து காணப்படுகின்றன. அவையெல்லாமிங் கெடுத்துக்காட்டப்புகின் மிகப்பல்குமாதலின், அவைதம்மை நுண்ணிய வாராய்ச்சியாற் பலநூலுதவிகொண்டு அறிந்துகொள்க. இவ்வாறு மொழிகளொன்றோடொன்று கலக்கப்பெறுவதற்கு அவற்றை வழங்கும் மக்களின் நாகரிகமே வழியாயிருத்தலால், நாகரிகம் வாய்ந்த வெந்தமொழியும் பிறமொழிக் கலப்பில்லாமலிருத்தலேற்புடைத்தாகாது. இது மக்களியற்கை யினையும், அவர்வாழ்க்கையினியல்புகளையும் ஆழம்பெற வாராய்ந்து பார்க்க வல்லுநர்க்கன்றி மற்றவர்க்கொருசிறிதும் புலப்படாதென்பது கடைப்பிடிக்க. தமிழ்மக்கள் பண்டுதொட்டே நாகரிகத்திற்சிறந்தவராயிருந்ததனால் அவரோடு பல மொழிபேசும் பலநாட்டவருங் கலந்து பழகவே மற்றைமொழிச்சொற்கள் சிலவுந் தமிழிற் கலப்பனவாயின. இங்ஙனம் காணப்படுதல் தமிழ்மொழியின் நாகரிகமுதிர் வினையும் அதன்வளனையும் தமிழ்நன்மக்களின் சிறப்பினையும் காட்டுவதேயொழிய அதற்கு அதனாற்றாழ்வு ஏற்படுதலைக் குறிக்கின்றதில்லையென்க. உண்மை இவ்வாறிருப்பவும், சுவாமிநாததேசிகரென்பார் தமது இலக்கணத்கொத்தில் அன்றியுந் தமிழ்நூற்களவிலையவற்று-ளொன்றே யாயினும் தனித்தமிழுண்டோ வெனக் கூறியது பொருந்தாதென்றொழிக.

இனி, நெடுங்கால முயிரோடிருந்து திகழுமொருமொழியிற் பிறசொற்கள் வந்து கலத்தல்போலச் சின்னாளுயிரோடிருந்து பின்னிறந்து படுமொரு மொழியிற் பிறசொற்கள் மிக நுழைந்து நிலைபெறுதற்கிடமேயில்லை. இதனாலேதான் ஆரியமொழியிற்

பிறமொழிச்சொற்கள் சேர்ந்து காணப்பட்டில. ஆரியம் பல்லாயிரமாண்டுகட்கு முன்னரே யெவரானும் பேசப்படாமலிறந்து பட்டமையின் அதன்கட் பிறசொற்கள் புகுதற்கு வாயில்காணாது ஒழிந்தன. இதுகொண்டு ஆரியமொழி உலகிற்குப் பயன்படாமையோடு அது நாகரிகவளர்ச்சிக்கு இசைந்ததாகாமையும் நன்குபெறப்படும். ஒருவர் ஒருமொழி பேசுகிறவராயிருந்தால்மட்டும் அவர் மற்ற மொழிச் சொற்களையெடுத்தாளநேருமல்லது அவர் ஏதுவுமே பேசாதவராயிருந்தாற் பிறவற்றைக் கைக்கொள்ளச் சிறிது மிடமுண்டாகமாட்டாதென்க. ஆதலால் உலகவழக்கின்றி யிறந்துபட்ட ஆரியமொழி பிறசொற்களையேற்கவும் மக்கள் வாழ்க்கைக்குப் பயன்படவும் மாட்டாதாயிற்று.

இனி, ஏழெட்டு நூற்றாண்டுகளாய் புதிது முளைத்தெழுந்து இப்போது ஆங்காங்கு வழங்கிவரும் பல்வேறு மொழிகளையும் போல்வதன்று நமது தமிழ்மொழி; இஃது இன்னகாலத்திலேதான் தோன்றியதென்று கட்டுரைத்துச் சொல்லமாளாத பழமை யுடைத்தாய், இத்தனைகாலமாகியுந்தனது கன்னிப்பருவமும், இலக்கணவரம்பும் சிறிதும் மாறுபடாததாயுலாவிவருகின்றது. எஞ்ஞான்றுந் தமிழுண்டென்பதும், இலக்கண நெறிமாறாதுள்ளதென்பதும், பிற்றைக்காலத்துச் செந்தமிழ்ச் சான்றோர்க்குமொருதலையாதல்,

நின்றவனைவந்தநெடியோனடிபணிந்தா
னன்றவனுமன்பொடுதழீஇயமுதகண்ணா
னன்றுரைசெயென்றுபலநல்லுரைபகர்ந்தா
னென்றுமுளதென்றமிழியம்பியிசைகொண்டான்

எனவருங் கம்பநாட்டாழ்வா ரிராமாயணப்பாட்டானும்,

கண்ணுதற்பெருங்கடவுளுங்கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந்தாய்ந்தஇப்பசுந்தமிழ்ஏனை
மண்ணிடைச்சிலஇலக்கணவரம்பிலாமொழிபோல்
எண்ணிடைப்படக்கிடந்ததாஎண்ணவும்படுமோ

எனவருந்திருவிளையாடற்புராணப்பாட்டானும் பெறுதும். தமிழைப் போலவே பழமையுடையனவெனச்சொல்லற் கியைந்த

வடமொழி, கிரேக்கு, இலத்தீன், ஈபுரு, அராபி, சீனம் முதலான பலதேயமொழிகளெல்லா மிப்போது உலகவழக்கின் கண்ணின்றியிறந்தொழிய நமது செல்வச்செந்தமிழ் மொழியொன்றுமே எல்லாம்வல்ல இறைவனைப்போல என்றுமிறவாத இளமைத்தன்மைவாய்ந்து, இன்னும் பலமொழிகளும் பிறத்தற்கு நிலைக்களமாகியுமிலங்குகின்றது. இவ்வுண்மை, மனோன்மணியமென்னும் நாடகநூலினும், சைவசித்தாந்தத் தமிழ்த்திருமிகுந்த சுந்தரம்பிள்ளையவர்கள்,

பல்லுயிரும்பலவுலகும்படைத்தளித்துத்துடைக்கினுமோர்
எல்லையறுபரம்பொருண்முன்னிருந்தபடியிருப்பதுபோற்
கன்னடமும்களிதெலுங்கும்கவின்மலையாளமும்துளுவும்
உன்னுதரத்துதித்தெழுந்தேயொன்றுபலவாயிடினும்
ஆரியம்போலுலகவழக்கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத்திறம்வியந்துசெயன்மறந்துவாழ்த்துதுமே

எனத் தமிழ்த்தாய்வணக்கஞ்செய்து சேறலால் வலியுறுத்தப்படும். இது கிடக்க;

மூன்றாவதாகச் செந்தமிழ்நல்லிசைப்புலவர் நூற்குரியபொருள் களெனக்கொண்டு உரைத்தவெல்லாம் வடமொழி நூற்குரிய பொருள்காளமன்றித் தனித்தமிழ்க்கென ஒருபொருள் ஏற்பாடு இல்லையென்றார்கள் பிள்ளையவர்கள்.

தமிழ்நன்மக்களுள்ளே நிலவுகின்ற பொருளிலக்கணமென்பது, மக்களுயிர்க்குறுதியென நல்லறிவுடைய தொல்லாசிரியர் வகுத்தெடுத்துக்கொண்ட முதல் கரு வுரியும் காட்சிப்பொருளுங் கருத்துப்பொருளும் அவற்றின்பகுதியாகிய வைம்பெரும்பூதமும் அவற்றின்பகுதியாகிய இயங்குதிணையும் நிலைத்திணையும் பிறவு மாகிய பொருண்முழுவதூஉம் ஒருங்கெடுத்துக் கொண்டவற்றைக் கூறுபடுத்துரைத்து விளக்கமுறுவதொரு நூலாம். இதுதான் செந்தமிழ்த்தனிமொழியிலன்றி வேறு பிறபாடைகளிலித்துணை நுண்ணிதாக மதிவளம் பெருக்கியெழுதப்பட்டதூஉமின்று; அதனையாராயுநூல்களுங் கிடையா; இதனாற் பண்டைக்காலத்துத் தமிழாசிரியர் நுட்பவறிவும் பரந்தவுணர்ச்சியும் உலகியலறிவும் நன்றறிவுறுக்கப்

படுதல் காண்க. இனி அங்ஙனம் விரிந்து கிடப்பனவாகிய நுண்பொருட்பாவையெல்லாம் தமிழ்நூன்மரபு பற்றி யாராய்துமென மனவெழுச்சி கொண்டுபுகுவார்க்குச் சுருங்கிய வாணாளும் பெருகியபிணியு முன்மையின், பெருந்தவத் தொல்லாசிரியர் அருட்குறிப்புநிகழ அவர்க் கவற்றைச் சுருங்கவறிவுறுத்துவார், அப்பொருட்பாவையை யிரண்டு கூறுபடுத்து அகத்திணை புறத்திணை யெனப் பெயர்நிறீஇ அப்பகுதியிரண்டனு ளுலகியற்பொருண் முழுவதூஉம் பிறவுஞ் செறியத்துறுத்து விளக்குவாராயினர். இங்ஙனம் பொருளியல் தெரிக்குமிலக்கணங்களெல்லாம் முடியவெடுத்துக்கொண்டு முன்னொடு பின்மாறுகோளின்றி வரம்புகுறித்துரைக்கு நூல் முற்றத்துறந்து முழுத் தவமெய்தி முழுமுதலறிவினராய் விளங்கிய ஆசிரியர் தொல்காப்பிய னாரானலியற்றபட்டுள்ள தொல்காப்பியம் ஒன்றுமேயாம். உலகவியற்கையும் மனவியற்கையு மொருங்குவைத்துத் தமிழாசிரியரால் ஆராயப்பட்ட நுட்பம் வடமொழிப் பொருள்கட்குங் கிடையாவென்க.

இனித் தமிழ்நூல்களான் நுவலப்படும்பொருள்களெல்லாம் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற்பாலில் அடங்கும். இவற்றின் செறிவையுந் தமிழ்நூல்களின் திட்பத்தினையும் உய்த்துணரமாட்டாதார் சிலர் இவை வடநூலான் நுவலப்படும்பொருள்களாமென்பர். அவை போலியுரைகளாதல் காட்டுதும். நூலான் நுவலப்படும்பொருள்கள் உலக வழக்கானும் வேதவழக்கானும் அறமுதலியவாக விரித்துக் கூறப்படும். அவையே பின்னும் விரிவுநோக்கி அகமும் புறமுமாகத் தொகுத்துக்கூறவும்படும். விரித்தும், தொகுத்தும் கூறும் மரபு தனித்தமிழிற்கே உரியதொன்றாதல் தமிழ்க்குவரம்பாகிய திருவாரூர் வைத்தியநாததேசிகர் தாமியற்றிய இலக்கண விளக்கத்து அகத்திணையியற் குரைவிரிக்குமாற்றாலினிது பெறப்படுவதாமென்க.

இந்நுண்பொருட்டிறன்களையெல்லாம் வருந்தியாராயாது பரிமேலழகருரையின்கட்பட்டுத் தாமும் மயங்குவராயினர்.

அதுவுஞ்சாலாமை காட்டுதும். ஆசிரியர் திருவள்ளுவனார் செந்தமிழ்மொழியில் நூலியற்றுகின்றாராகலின், தாம் மேற்கொண்ட செந்தமிழ் வழக்கிற்கேற்ப எல்லாவுறுதிப் பொருளையும் அறம் பொருளின்பம் வீடென அவ்வாறு பகுத்தோதினார். இப்பாகுபாடு செந்தமிழ் மரபிற்கே உரித்தாமென்பது, "இன்பமும் பொருளு மறனு மென்றாங், கன்பொடு புணர்ந்த வைந்திணை மருங்கின்" என ஆசிரியர் தொல்காப்பியனாரும், "அறனும் பொருளுமின்பமு மூன்று மென உறையூர் முதுகண்ணன்சாத்தனாரும், சிறப்புடை மரபிற் பொருளு மின்பமுமறத்து வழிப்படுஉந்தோற்றம் போல" வெனக் கோவூர்கிழாருங் கூறுமாற்றால், தெளியப்படும். இவை இங்ஙனமிருப்பவும், பரிமேலழகர் காமத்துப்பான் முகவுரையில் இவர் பொருட்பாகுபாட்டினை அறம்பொருளின்பமென வடநூல்வழக்குப்பற்றி ஓதுதலான் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும். வடமொழியில் மனு முதலான மிருதி களெல்லாம் பிரம்மச்சரியம், கிருகத்தம், வானப்பிரசத்தம், சன்னியாசம் என நால்வகை நிலை பற்றியோதியல்லது அறம்பொருளின் பவழக்குப் பற்றியோதாமையும் யாங்கூறியதே பொருளென்றலை வலியுறுத்தும். திருக்குறள் நூலாசிரியர் விரித்துக்கூறும் தமிழ்மரபு கொண்டு அறம் பொருளின்பம் வீடென விரித்துரைத்தா ரென்றலே சாலும். என்னை? மக்களுக்கு வேண்டுவனவெல்லாம் தொகுத்துவைத்துக்கொண்டு அவைதழீஇ யொரேயொருநூலே செய்தனராகலின் என்பது.

(தொடரும்)

இங்ஙனம்
வவுனியாவிலிருந்து
சு.இராஜையனார்
யாழ்ப்பாணத்து நல்லூர்

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

## ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
திரு. ந. வாசுகிராசா
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

பதிப்பாசிரியர், இரா.சதாசிவம், 2/404, மருதுபாண்டியர் தெரு, மதுரை-20. ✆ 2532879

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 2341116